

ஏப்ரல், மே- 2012
155,156.

பொருளடக்கம்



| வ. எண் | கட்டுரை | பக்கம் |
|---|---|---|
| 1. | தலையங்கம் | 1-2 |
| 2. | திருநாராயணபுரத்தில் நந்தன வருடம் நடைபெற்ற உடையவர் ஆண்டு திருநக்ஷத்திர வைபவத்தின் பத்தாம் நாள் நிகழ்ச்சிகள் பற்றிய ஓர் தொகுப்பு | 3-8 |
| 3. | எமது அடுத்த வெளியீடு! பற்றிய அறிவிப்பு | 8-16 |
| 4. | ஹரிதாஸரின் ‘இருசமயவிளக்கம்’ | 17-18 |
| 5. | திருவிருத்தத்தில் அகஇலக்கியக் கோட்பாடுகள் | 19-21 |
| 6. | இந்து சமய இதழ்கள் ஓர் ஆய்வு | 22-24 |
| 7. | சார்ங்கவர்ஷம் ‘வேதநாயகன் விஷ்ணுவே’ | 25-28 |
| 8. | ‘மாறன் பாப்பாவினம்’ | 29-32 |
| 9. | ‘இராமானுசர் ஆயிரம்’ நூல் மதிப்பீடு | 33-42 |
| 10. | பிள்ளைலோகம் ஜீயர் அருளிச்செய்த ‘‘ஸ்ரீவைஷ்ணவஸமயாசார நிஷ்கர்ஷம்’’ நூல் மதிப்பீடு | 43-54 |
| 11. | சொல்லும் பொருளும் | 55-62 |
| 12. | வாசகர் கடிதம் | 63-64 |
| 13. | எமது அடுத்த வெளியீடு! பற்றிய அறிவிப்பு (தொடர்ச்சி) | 65-68 |



Editor : SriVaishnavaSri **A.KRISHNAMACHARI,**
Printed at: *Sri Ranganachiyar Achagam, 214, East Uthara St., Srirangam, Trichy-6. 98842 89887. www.srivaishnavasri.com*

***Sri:***

***Kasi, Gaya Allahabad Haridwar Badrinath, Gurukshethra yathra Rs. 18,000/- per head***

***Detailed, Date and Daywise programme***

2012:

| | | |
|---|---|---|
| 10.09. | Mon. | Leave Chennai by Tamil Nadu Express |
| 11.09. | Tue. | Train Journey |
| 12.09. | Wed. | Arrival at Delhi, Local sight seeing Night leave at 11PM to Vrindhavan |
| 13.09. | Thu. | Vrindhavan Gokulam, Mathura, Vrindhavan halt |
| 14.09. | Fri. | Vrindhavan to Chithrakoot Journey |
| 15.09. | Sat. | Chithrakoot darshan Evening. Allahabad night halt |
| 16.09. | Sun. | Allahabad sangam snanam Allahabad sight seeing. Night journey |
| 17.09. | Mon. | Gaya, Theertha Srartham at Vishnu padam temple. Halt |
| 18.09. | Tue. | Anna srartham at Gaya, Pinda pradhanam at Akshayavadam Evening Budda gaya Night journey to Varanasi |
| 19.09. | Wed. | Varanasi Darshan Night halt |
| 20.09. | Tue. | 4AM leave Varanasi to Ayodhya, Darshan Night halt |
| 21.09. | Fri. | 4AM Leave Ayodhya to Nimisaranyam Darshan Night. Journey to Haridwar |
| 22.09. | Sat. | Haridwar darshan Halt |
| 23.09. | Sun. | 4AM Leave Haridwar for Badrinath Pipalkoti or Joshimutt |
| 24.09. | Mon. | Arrival at Badrinath. Halt at Badrinath |
| 25.09. | Tue. | Leave Badrinath at 11AM Srinagar halt |
| 26.09. | Wed. | Leave Srinagar early morning Rishikesh local sight seeing halt |
| 27.09. | Thu. | Haridwar to Gurukshethra Night journey |
| 28.09. | Fri. | Kurukshethra darshan. Night journey to Delhi |
| 29.09. | Sat. | Preparation for journey Leave Delhi by Tamilnadu Express |
| 30.09. | Sun. | Train journey |
| 01.10. | Mon. | Arrival at Chennai by the Grace of Badrinath Bhagavan |

Programmes are subject to change

Contact immediately.

Srimathi Padmavathy Krishnan 22/132 Sannithi Street, Nanguneri 627 108, 94440 75064

Smt. Lakshmi Gopinath 3-3-21Bagh Ameer Kukatpalli, Hyderadad 500 062 Mobile No. 099894 50402.

***Statement about ownership and other particulars about***

# PANCHAJANYAM

***(Registration No. TNTAM/2000/5374)***

**From IV (See Rule 8)**

| | | | |
|---|---|---|---|
| 1. | Place of Publication | : | Srirangam |
| 2. | Periodicity | : | Monthly |
| 3. | Printer's Name | : | Sri Ranganachiyar Achagam |
| 4. | Publisher's Name | : | A. Krishnamachari |
| | Nationality | : | Indian |
| | Address | : | 214, East Uthara Street, Srirangam, Trichy-6. |
| 5. | Editor's Name | : | A. Krishnamachari |
| | Nationality | : | Indian |
| | Address | : | 214, East Uthara Street, Srirangam, Trichy-6. |
| 6. | Name & Address of the individuals who own the news paper and partners or share holders holding more than one percent of the total | : | A. Krishnamachari 214, East Uthara Street, Srirangam, Trichy-6. |

I A. Krishnamachari, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Srirangam,
31.03.2011

A. KRISHNAMACHARI
Editor & Publisher

Registration No.TNTAM/2000/5374, Registered as a Newspaper
Registered Newspaper - Posted at Srirangam H.P.O.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமத் வரவர முநயே நம:

# பாஞ்சஜன்யம்

**இதழ் எண். 155,156 ஏப்ரல், மே - 2012**

**இலக்கியம், வரலாறு, கல்வெட்டுகள், ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தக் கோட்பாடுகள், மற்றும் மரபு மீறல்களைக் கண்டித்து எழுதப்படும் கட்டுரைகளைக் கொண்ட ஒரு புரட்சிகர பல்சுவை மாத இதழ்.**

**ஆசிரியர்:ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ.கிருஷ்ணமாசார்யர்.**

**தனிப்பிரதி ரூ.15/-**

**ஆயுள் சந்தா 1500/-** **ஆண்டு சந்தா 150/-**

**கிடைக்குமிடம்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ,**
**214, கீழை உத்தரவீதி, திருவரங்கம், திருச்சி-6.**
**☎: 0431-2434398. www.srivaishnavasri.com**

ஸ்ரீ:



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ


| முழக்கம்-18,19 | பாஞ்சஜன்யம்<br>ஏப்ரல் மே 2012-155-156 | ஒலி 4,5 |
|---|---|---|


## இராமானுசர் ஆயிரம்-முதல் மூன்று பாகங்கள் - நூல் வெளியீட்டு விழா

எம்பெருமானாரின் ஆயிரமாவது ஆண்டு அவதார திருநக்ஷத்திர உத்ஸவ கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக நந்தன ஆண்டு 'இராமானுசர் ஆயிரம்' என்ற நூலின் முதல் மூன்று பாகங்கள் 25-4-2012 புதன்கிழமையன்று ஸ்ரீபெரும் பூதூர் யதிராஜ ஜீயர் மடத்தில் வெளியிடப்பட்டன. இந்த நூலைப் பற்றிய குறிப்புகள் இந்த இதழ் பக்கம் 33 தொடங்கி 42 ஈறாக இடம் பெற்றுள்ளன.

**ஸ்ரீபெரும்பூதூரில் வெளியீட்டு விழா:**

25-4-2012 அன்று ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீபெரும்பூதூர் அப்பன் பரகால ராமானுஜ ஜீயர் ஸ்வாமி தலைமையில் இந்த வெளியீட்டு விழா, யதிராஜ ஜீயர் மடத்தில் நடைபெற்றது. ஸ்ரீஜீயர் ஸ்வாமி நூலினை வெளி யிட்டு மங்களாசாஸனம் செய்தருளினார். இந்த நூலின் முதல்

பிரதிகளை ஸ்ரீபெரும்பூதூர் ஸ்ரீமத் பரமஹம்யேத்யாதி, யதிராஜ ஜீயர் ஸ்வாமி, ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீமணவாளமாமுனிகள் மடம் 23ஆவது பட்டம், ஸ்ரீஸ்ரீஸ்ரீ சடகோப ராமாநுஜ ஜீயர் ஸ்வாமி ஆகியோர் பெற்றுக்கொண்டு மங்களாசாஸனம் செய்தருளினர்.

இந்த நூல் வெளிவருவதற்கும், குறைந்த விலையில் விற்பனை செய்து வருவதற்கும் நிதியுதவி புரிந்த புரவலர்கள் A.N.S. Jewellers உரிமையாளர்கள் கைங்கர்ய ஸ்ரீமான்கள் A.S.ராஜேந்திரன், A.S. ஸ்ரீராம் ஆகியோருக்கு **ஸ்ரீமத் பரமஹம் ஸேத்யாதி எம்பார் ஜீயர் ஸ்வாமி** திருக்கரங்களால் பொன்னாடை அணிவித்துப் பாராட்டப்பட்டனர்.

நூல் வெளியீட்டு விழா தொடக்கத்திற்கு முன்பு ஸந்நிதி தெருவில் அமைந்துள்ள ஸ்ரீ யதிராஜ ஜீயர் மடத்திற்கு முன்பு எம்பெருமானார் யானை வாகனத்தில் எழுந்தருளி இந்த நூலை கடாக்ஷித்தது ஓர் பெரும்பேறாகும்.

**திருநாராயணபுரத்தில் வெளியீட்டு விழா:**

ஞானமண்டபம் என்று கொண்டாடப்படும் மேலக் கோட்டை திருநாராயணபுரத்தில் திருவாதிரை நாளன்று (27-4-2012) வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் உபய வேதாந்த டிரஸ்ட் சார்பில் நடைபெற்ற சதஸ்ஸின்போது, ''இராமானுசர் ஆயிரம்'' நூலின் முதல் மூன்று பாகங்கள் வெளியீட்டு விழா நடைபெற்றது.

யதுகிரிதாயார் ஸந்நிதி முன்பு நடைபெற்ற இந்த விழாவிற்கு ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ.உ.வே. கண்ணன் ஸ்வாமி தலைமை தாங்கி முதல் மூன்று பாகங்களை வெளியிட்டு வாழ்த்துரை வழங்கினார். இந்த நூலின் பிரதிகளை உபய வேதாந்த டிரஸ்ட்டின் தலைவர் பெற்றுக் கொண்டார். உடையவர் திருக்கரங்களில் இந்த நூலின் பிரதிகள் ஸமர்ப்பிக்கப்பட்டு, யதுகிரிதாயாரும் எம்பெருமானாரும் திருச்செவிசாற்ற இந்த விழா நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

* * *



**திருநாராயணபுரத்தில் நந்தன வருடம் நடைபெற்ற உடையவர் ஆண்டு திருநக்ஷத்திர வைபவத்தின் பத்தாம் நாள் நிகழ்ச்சிகள் பற்றிய ஓர் தொகுப்பு.**

அர்ச்சையில் ஆழ்வார் ஆசாரியர்களுக்கு ஒவ்வொரு திவ்ய தேசத்திலும் பல சிறப்புகளுடன் ஆண்டு திருநக்ஷத்திர உத்ஸவம் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு வெளியிடப்பட்டுள்ள இராமானுசர் ஆயிரம் என்ற நூலின் இரண்டாம் பகுதியில் திருவரங்கம் பெரிய கோயிலில் உடையவர் ஆண்டு திருநக்ஷத்திர உத்ஸவம் எவ்வாறு கொண்டாடப்பட்டு வருகிறது என்பதைப் பற்றிய விரிவான குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன. (பக்கங்கள் 702-734 முடிய). இதேபோன்று மற்றைய திவ்ய தேசங்களில் அர்ச்சையில் உடையவருக்கு நடைபெறும் கொண்டாட்டங்கள் பற்றிய குறிப்புகள் அடுத்த ஆண்டு வெளியீட்டில் இடம்பெற உள்ளன. ஆயினும் இந்த ஆண்டு திருநாராயணபுரத்தில் திருவாதிரை நாளன்று கண்ணால் கண்டு அனுபவித்த வைபவங்களை அனைவரும் மனக்கண்ணால் கண்டு மகிழ வேண்டுமென்ற அவாவினால் அன்றைய தினம் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் தொகுப்பு கீழே தரப்பட்டுள்ளது.

ஞானமண்டபமாகிய திருநாராயணபுரத்தில் இராமானுசருடைய திருமேனி 'தமருகந்த திருமேனி' என்று கொண்டாடப் படுகிறது. இராமானுசருடைய பிரிவை நினைத்துக் கலங்கிய ஐம்பத்திருவர்க்கு தம்மைப்போல் திருமேனி ஒரு சிற்பியைக் கொண்டு செய்வித்து அதில் தம்முடைய சக்தி விசேஷத்தை ஏறியருளப் பண்ணியதால் இந்தத் திருமேனிக்குத் 'தமருகந்த திருமேனி' என்ற பெயராயிற்று.

ஒவ்வொரு நாளும் இந்தத் திவ்யதேசத்தில் உடையவருக்கு விச்வரூப ஸேவை ஆனபிறகுதான் செல்வப்பிள்ளைக்கும், யதுகிரி தாயாருக்கும் விச்வரூப ஸேவை நடைபெறும். அவ்வப்போது திருவீதிகளில் உபய நாய்ச்சிமார்களோடு செல்வப்பிள்ளை புறப் பாடு கண்டருளும்போது உடையவர் திருவீதிகளில் எழுந் தருளுவார். உடையவருக்கு ஒவ்வொரு மாதமும் திருவாதிரையன்று சிறப்புத் திருமஞ்சனம் நடைபெறும். அன்றைய தினம்

மாலை திருவீதியில் உடையவர் புறப்பாடு கண்டருளுவார். அப்போது இராமானுசநூற்றந்தாதி ஸேவை நடைபெறும்.

இதுதவிர திருநாராயணபுரத்தில் திருநாராயணப் பெருமாள் மூலவரைக் கண்டெடுத்து பிரதிஷ்டை கண்டருளிய தினமாகிய தை புனர்பூசத்தன்றும், டில்லியிலிருந்து ராமப்பிரியரை மீட்டு வந்து பிரதிஷ்டை கண்டருளிய மாசி கேட்டையன்றும் உடையவர் பல வைபவங்களைக் கண்டருளுகிறார். ஆண்டு திருநக்ஷத்திர உத்ஸவத்தின் 9ஆம் நாள் திருத்தேரில் எழுந்தருளுகிறார் இராமானுசர்.

10ஆம்நாள் காலை விச்வரூபம் மற்றும் நித்தியப்படி க்ரமங்கள் ஆனபிறகு உடையவர் திருவீதிப்புறப்பாடு கண்டரு ளினார். அப்போது இயல் ஸ்ரீவைஷ்ணவர்கள் திருவீதியில் இராமா னுச நூற்றந்தாதியை ஸேவித்து வந்தனர். இந்தப் புறப்பாடு மங்களகிரி என்னும் வாகனத்தில் நடைபெற்றது. கோயில் பிரதான கோபுர வாசலில் இராமானுச நூற்றந்தாதி சாற்றுமுறை நடை பெற்றது. அந்த ஊர் வழக்கப்படி முதலியாண்டான் முதலில் சாதிக்கப்பெறும். அதன்பிறகு இயல் ஸ்ரீவைஷ்ணவர்கள் கோஷ்டி தலைவரால் திருத்துழாய் விநியோகம் செய்யப்பட்டது. இந்தத் திருத்துழாயை அர்ச்சகரிடமிருந்து இயல் ஸ்ரீவைஷ்ணவர்கள் கோஷ்டி தலைவர் வாங்கிக் கொண்டபோது அனைத்து ஸ்ரீவைஷ்ணவர்களும் 'மஹாப்ரஸாதம்' என்று உரத்த குரலில் கூறினர். இயல் கோஷ்டியினருக்கும் மற்றையோருக்கும் ப்ரஸாத விநியோகம் நடைபெற்றது.

அதன்பிறகு உடையவர் ஆஸ்தானத்திற்கு எழுந்தருளினார். அன்றைய தினம் நடைபெற்ற விசேஷ திருமஞ்சனத்திற்கு கல்யாணிபுஷ்கரிணியிலிருந்து திருமஞ்சன தீர்த்தம் 'ஸ்தோத்ர ரத்ன' அநுஸந்தானத்துடன் எழுந்தருளப் பண்ணப்பட்டது. அதன் பிறகு உடையவருக்கு வேதகோஷங்களோடு ஸ்நபன திருமஞ்சனம் நடைபெற்றது. திருநாராயணபுரத்தில் கூரத்தாழ்வான் ஸந்நிதி உடையவர் ஸந்நிதிக்கு அடுத்து மேற்குப் பகுதியில் அமைந்துள் ளதால் உடையவருக்கு நடைபெறும் அனைத்து வைபவங்களும் ஆழ்வானுக்கும் நடைபெறும். அன்றைய தினம் கூரத்தாழ்வானும் உடையவருடன் எழுந்தருளி இருந்தார்.



திருமஞ்சனம் ஆனபிறகு நித்தியானுஸந்தான கோஷ்டி நடைபெற்றது. அந்தத் திவ்யதேச, வழக்கப்படி பொதுத்தனியன் கள் ஸேவிக்கப்படும் போது 'லக்ஷ்மிநாதஸமாரம்பாம்' என்ற தனியனுடன் தொடங்காமல் 'யோ நித்யமச்யுத' தனியனுடன் தொடங்கப்படும். 'பூதம் ஸரஸ்ய மஹதாஹ்வய' தனியன் ஸேவித்த பிறகு 'லக்ஷ்மிநாதஸமாரம்பாம்' ஸேவிக்கப்படும். பொதுத்தனியன் கள் ஸேவிக்கப்பட்டபிறகு கண்ணிநுண்சிறுத்தாம்பு ப்ரபந்தம் ஸேவிக்கப்படும். அதன்பிறகே திருப்பல்லாண்டு. திருப்பள்ளி யெழுச்சி, திருப்பாவை ஆகியவை நித்யாநுஸந்தான கோஷ்டியில் ஸேவிக்கப்படும்.

அதன்பிறகு திருவாய்மொழி எட்டாம்பத்து ஐந்தாம் பதிகம் ஸேவிக்கப்பட்ட பிறகு திவ்யப்பிரபந்த ஸேவை நிறுத்தப்பட்டது. பின்பு 'கத்யத்ரய ஸேவை' நடைபெற்றது. கத்யத்ரய ஸேவை பூர்த்தியானபிறகு திருநாராயணப்பெருமாள் ஸந்நிதியிலிருந்து பெருமாளுடைய ஸ்ரீசடாரி உபநிஷத் கோஷங்களோடு எழுந் தருளப் பண்ணப்பட்டது. உடையவருக்கு மரியாதை ஆனபிறகு அங்கே கூடியிருந்தோர் அனைவருக்கும் ஆண், பெண் வேறு பாடின்றி பெருமாள் ஸ்ரீசடாரி ஸாதிக்கப்பட்டது. கத்யத்ரய விண்ணப்பம் செய்ததால் உடையவருடைய சரணாகதியை அங்கீகரித்த திருநாராயணன், உடையவரைச் சார்ந்து அவருடைய ஸம்பந்தத்தை அங்கே கூடியிருந்த மக்கள் அனைவரும் பெற்றதால் அவருக்கு தந்த அதே பலனை அங்கே கூடியிருந்தோர் அனை வருக்கும் தந்திடும் பாவனையில் இந்த நிகழ்ச்சி நடைபெறுகிறது. பெருமாளுடைய ஸ்ரீசடாரி ஆஸ்தானத்திற்கு எழுந்தருளிய பிறகு எட்டாம்பத்து ஆறாம் பதிகம் தொடங்கி எட்டாம்பத்து பூர்த்தி செய்யப்பட்டது. இதன் நடுவில் அங்கே கூடியிருந்த அனைவ ருக்கும், உடையவருக்கு கண்டருளப் பண்ணப்பட்ட 'மதுபர்க்கம்' விநியோகிக்கப்பபட்டது. உடையவர் திருமஞ்சனம் கண்டருளும் போது அவர் சாற்றிக் கொண்டிருந்த வஸ்திரம் பல நூறு துண்டு களாகக் கத்தரிக்கப்பட்டு அனைவருக்கும் ப்ரஸாதமாக வழங்கப் பட்டது. இந்தக் கைங்கர்யத்தை இயல் ஸ்ரீவைஷ்ணவ கோஷ்டியினர் செய்திட்டனர். இதனை தலையில் பரியட்டமாகவோ அல்லது காதில் செவிப்பூபோலவோ அன்றைய தினம் அனைவரும் அணிந்து கொண்டு காட்சியளித்தனர்.

அதன்பிறகு ஸ்தல ஆசார்யபுருஷர்கள் எம்பெருமானா ருக்கு மங்களாசாஸனம் செய்திட்டனர். ஸ்ரீதேசிகன், ஸ்ரீ பிள்ளைலோகா சார்யர், ஸ்ரீமணவாளமாமுனிகள் ஆகியோருக்கு எம்பெருமானாரு டைய ப்ரஸாதம், திருமாலை, ஈரவாடை தீர்த்தம் ஆகியவை வட்டில்களில் அந்தந்த ஸந்நிதி அர்ச்சகர் மூலம் அனுப்பி ***வைக்கப்பட்டது. (எந்த ஸந்நிதிக்கு இந்த மரியாதைகள் முதலில் செல்வது என்பது சுழல் முறையில் அமுலாக்கப்பட்டு வருகிறது.)*** அதன்பிறகு திருப்பாவை சாற்றுமுறை நடைபெற்றது. அந்த ஊர் வழக்கப்படி திவ்யப்ரபந்தத்தில் எந்தப் பகுதியானாலும் அந்தந்த பிரபந்த முடிவில்தான் சாற்றுமுறை நடைபெறும். அதையொட்டி எட்டாம் பத்து சாற்று முறை நடைபெறவில்லை. முதலியாண்டான் ஸாதித்த பிறகு, திருத்துழாய் விநியோகம், தீர்த்தகோஷ்டி, ப்ரஸாத விநியோகம் ஆகியவை நடைபெற்றன. இந்த நிகழ்ச்சி முடிந்த பிறகே ஆங்காங்கே ததீயாராதனங்கள் நடைபெற்றன.

அன்றைய தினம் மாலை உடையவர் சந்தனக்காப்பு அலங் காரத்துடன் காட்சியளித்தார். நம்மாழ்வார், ஆழ்வான், குமுதவல்லி நாய்ச்சியாரோடு திருமங்கைமன்னன், உபயநாய்ச்சிமார்கள் ஆகியோர் ஒரே வரிசையில் எழுந்தருளியிருந்து இரவு திருவாய் மொழி கேட்டருளினர்.

மாலை ஆறு மணிக்கு பிறகு உபய வேதாந்த வித்வத் ஸதஸ் நடைபெற்றது. ஸதஸ்ஸின் முடிவில் ‘இராமானுசர் ஆயிரம்’ முதல் மூன்று பாகங்கள் வெளியீட்டு விழாவும் நடைபெற்றது. இரவு ஏழு மணியளவில் ஒவ்வொரு ஆண்டும் கல்யாணி புஷ்கரிணி யின் தென்கரையில் அமைந்துள்ள சீதாரண்யம் எனப்படும் இராமர் ஸந்நிதிக்கு உடையவர் எழுந்தருளுவார். ***(இந்த ஆண்டு பெருத்த மழையின் காரணமாய் சீதாரண்யத்திற்கு எழுந்தருளப்பண்ண வேண் டுமா வேண்டாமா என்பதைப் பற்றி இருதரப்பினரிடையே வாக்கு வாதம் ஏற்பட்டு முடிவில் மழை நின்ற பிறகு இரவு பதினொரு மணிக்கு ஆசார்யன் சீதாரண்யத்திற்கு எழுந்தருளினார்.)***

ஆதிசேஷனே இராமாவதார காலத்தில் லக்ஷ்மணனாக அவதரித்து உகந்த அடிமைகளை செய்து போந்ததை நினைவில் கொண்டிடும் வண்ணம் கலியுகத்தில் ஆதிசேஷன் அம்சமான ராமானுஜர் பெருமாள் ஸந்நிதிக்கு இன்று எழுந்தருளுகிறார்.



இந்த வருடம் பெய்த கனமழையின் காரணமாய் ஆண்டு தோறும் இயல் ஸ்ரீவைஷ்ணவர்கள் எழுந்தருளி பெருமாள் திரு மொழி ஸேவிக்கும் வைபவம் நடைபெறவில்லை. அன்றைய தினம் இரண்டாம் முறை ஸ்தானீகர் உடையவருக்கு பிக்ஷை ஸாதித்த பிறகு உடையவர் அங்கிருந்து புறப்பாடு கண்டருளினார். நம்மாழ் வார் ஸந்நிதி முன்பு இராமானுச நூற்றந்தாதி கோஷ்டி தொடக்கம் செய்யப்பட்டது. வரும் வழியில் உடையவர் ஸ்ரீதேசிகன் ஸந் நிதிக்கு உள்ளே எழுந்தருளினார். அப்போது வடகலை கோஷ்டி யினர் யதிராஜ ஸப்ததி ஸ்தோத்ரத்தை ஸேவித்தனர். ஆனால் இயல் ஸ்ரீவைஷ்ணவர்கள் உள்ளே சென்று இந்த நிகழ்ச்சியில் பங்கு கொள்ளாது வெளியே இராமானுச நூற்றந்தாதியை ஸேவித்துக் கொண்டிருந்தனர்.

அதன்பிறகு உடையவர் திருவீதி வலம்வந்து ஸ்ரீமணவாள மாமுனிகள் ஸந்நிதியை சென்றடைந்தார். இயல் ஸ்ரீவைஷ்ணவர் கள் இராமானுச நூற்றந்தாதி 105ஆம் பாசுரத்தோடு ஸேவையை முடித்துக் கொண்டு, யதிராஜ ஜீயர் மடத்தின் முன்பு யதிராஜ விம்சதியை தொடங்கி உடையவருடன் வீதி வலம் வந்தனர். ஸ்ரீமணவாளமாமுனிகள் ஸந்நிதியில் உள்ளே எழுந்தருளிய பிறகு யதிராஜ விம்சதி பூர்த்தி செய்யப்பட்டது. உடையவருக்கு லகு திருவாராதனம் கண்டருளப் பண்ணப்பட்ட பிறகு யதிராஜவிம்சதி மீண்டும் ஸேவிக்கப் பெற்றது. சாற்றுமுறை ஆனபிறகு கோஷ்டியா ருக்கு முதலியாண்டான், தீர்த்தம், திருத்துழாய் விநியோகம் நடைபெற்றது. அதன்பிறகு ப்ரஸாதவிநியோகம் மேற்கொள்ளப் பட்டது.

பெரிய ஜீயர் ஸந்நிதியிலிருந்து உடையவர் புறப்பாடு கண்டருளி கோபுர வாசல் முன்பாக எழுந்தருளி இருந்தார். அப்போது செல்வப்பிள்ளை (ராமப்பிரியர்) மத்ஸ்யாவதார கபாய் சாற்றிய திருக்கோலத்தோடு ஸேவை ஸாதிக்க அப்போது இயல் ஸ்ரீவைஷ்ணவர்கள் இராமானுச நூற்றந்தாதி சாற்றுமுறையை செய்திட்டனர். அதன்பிறகு திருவீதியில் எழுந்தருள தசாவதார திருக்கோலங்கள் செல்வப்பிள்ளைக்கு ஸமர்ப்பிக்கப்பட்டது. அதன் முடிவில் திருநாராயணன் ஸந்நிதி முன்பு வெளி ப்ராகாரத்தில் ஆரத்தி நடைபெற்றது. பிறகு உடையவர் பிள்ளைலோகாசார்யர்

ஸந்நிதி முன்பு எழுந்தருளினார். அங்கு அவருக்கு பிள்ளைலோகா சார்யர் ஸந்நிதிக்காரர் பஹுமானங்களையும் பழத்தட்டுகளையும் ஸமர்ப்பித்திட்டார். ***(உடையவர் ஸந்நிதி முன்பு நடைபெறும் எந்த நிகழ்ச்சியைச் சார்ந்த ஸேவாகாலமானாலும் பிள்ளைலோகாசார்யர் ஸந்நிதிக்கதவுகள் திறந்தே இருக்கும். அவரும் திவ்யப்பிரபந்த ஸேவை யை திருச்செவி சாற்றுவதாக ஐதிஹ்யம்.)***

உடையவர் ஆஸ்தானத்திற்கு எழுந்தருளிய பிறகு ஸ்தானீ கரால் உடையவர் தாலாட்டு ஸேவிக்கப்பட்டது. மிக நேர்த்தியான சொற்கட்டுடன் கூடிய இந்தத் தாலாட்டு கேட்பதற்கு இனிமை பயப்பதாய் அமைந்திருந்தது. ஆசார்யனுக்கு தளிகை ஸமர்ப்பித் திட்ட பிறகு திருவாய்மொழி ஒன்பது மற்றும் பத்தாம் பத்துக்கள் ஸேவாகாலம் நடைபெற்றது. உடையவருக்கு கண்டருளப் பண்ணப்பட்ட இனிப்புப் ப்ரஸாதம் (லட்டு) அனைவருக்கும் வழங்கப்பட்டது. அந்த ஊர் வழக்கப்படி பத்தாம்பத்து பத்தாம் பதிகம் அனைத்து பாசுரங்களும் சாற்றுமுறையாக ஸேவிக்கப் பட்டது. ஆனால் சாற்றுமுறை 'மணவாளமாமுனியே இன்னும் ஒரு நூற்றாண்டிரும்' என்ற வரிகளோடு முடிவுற்றது. வாழிதிருநாமமோ, உபதேச ரத்தினமாலையில் அமைந்துள்ள நாட்பாட்டுகளோ ஸேவிக்கப் படவில்லை. இந்த நிகழ்ச்சிகள் சனிக்கிழமை காலை முடிவுற்றன. இவ்வாறாக பல வைபவங்களோடு உடையவர் திருநக்ஷத்திர உத்ஸவம் இந்த ஆண்டு நடைபெற்றது. ✱✱✱

## எமது அடுத்த வெளியீடு! பற்றிய அறிவிப்பு

**"Daylight Robbery of the Tamilnadu HR & CE Department proven with facts and figures - How Hindus are cheated - A detailed study."**

**''தமிழ்நாடு இந்துசமய அறநிலையத்துறையின ரின் பகற்கொள்ளை-புள்ளி விபரங்களோடு. இந்துக்கள் எவ்வாறு ஏமாற்றப்படுகின்றனர். என்பது பற்றிய விரிவான குறிப்புகளுடன்.''**



ஆங்கிலம் மற்றும் தமிழ் ஆகிய இருமொழிகளில் இந்த நூல் 2012ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வெளிவர உள்ளது.

அறநிலய(?)த் துறை ஓர் அரசுத்துறை. 60 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ்நாட்டின் பல்லாயிரக்கணக்கான திருக்கோயில்க ளையும், கோயில் கட்டளைகளையும் , திருமடங்களையும் அந்தத் துறை தன் முழுக்கட்டுப்பாட்டில் வைத்திருப்பதை பலரும் அறி வார்கள். ஆயினும், அத்துறை இவ்வாறு கோயில்களையும் அறநிலையங்களையும் தன் இரும்புப்பிடியில் வைத்திருப்பதற்கு அந்தத் துறைக்குத் தார்மீக ரீதியிலும், சட்டப்படியும் எந்தவித உரிமையும் கிடையாது என்பதை பெரும்பாலானோர் அறிய மாட்டார்கள்.

உலகில் வேறு எங்கும் காணமுடியாதபடி, ஆயிரம் வருடங்களுக்கு முந்தைய கோயில்கள் நூற்றுக் கணக்கில் இருக்கும் ஒரே மாநிலம் தமிழகம் தான். இதன் காரணமாகவே தமிழக அரசின் சின்னமாக கோயில் கோபுரம் விளங்குகின்றது.

தமிழர்களின் பெருஞ்சிறப்புகளான மொழி, இலக்கியம், ஆடல், பாடல், இசை, சிற்பக்கலை, கட்டுமானக்கலை, பண்பாடு, சரித்திரம், வாழ்வியல் இவையனைத்தும் கோயில்களைச் சார்ந்த வையே. இது மறுக்க முடியாத உண்மை. கோயில்களை ஒட்டியும் அவற்றைச் சார்ந்தும் இருந்ததால் தமிழக இந்துக்களுக்கு பல நன்மைகள் தாமாகவே விளைந்தன. இதுவும் மறுக்க முடியாத உண்மை.

இன்றைய தினம் கோயில்களில் கூட்டமும், வருவாயும் அதிகரித்துள்ளன. ஆயினும், கோயில்கள் முறையாகப் பேணப் படாமலும், அவற்றின் தொன்மையான ஆராதனை முறைகளிலும், பழக்க வழக்கங்களிலும், அரசும், அரசியலாரும் குறுக்கீடு செய் வதும், அவற்றின் சொத்துக்கள் சூறையாடப்பட்டும், அருமையான கலை பொக்கிஷங்கள் கொள்ளையடிக்கப்பட்டு வருவதும் தொடர் நிகழ்ச்சிகளாகி விட்டன. தங்கள் கோயில்களை தாங்களே நிர்வாகம் செய்யும் உரிமையும், அவ்வாறு பல ஆண்டு களாக உரிமை இழந்து நின்றதை வேடிக்கை பார்த்து வந்ததில் தகுதியையும் திறனையும் இன்று பெரும்பாலான தமிழ் இந்துக்கள் இழந்து நிற்கின்றனர்.

இத்தகைய இழிநிலை தொடர்வதற்குப் பல காரணங்கள் உள்ளன. இந்துக்களின் அறியாமை, அலட்சியம், ஆட்சியாளர் உள்ளிட்ட அரசியல் கட்சிகளின் இந்துமதவிரோதக் கொள்கை, உயர்நீதிமன்றத்தின் செயல்பாடுகள், கோயிலைப் பாதுகாக்க வேண்டிய தக்கார்களும் அறங்காவலர்களும், உழலின் ஊற்றுக் கண்களாக விளங்குதல் போன்றவை முக்கிய காரணங்கள்.

இந்த அறநிலையத்துறை எப்படித்தோன்றியது? எவ்வாறு அஃது அசுரத்தனமாக வளர முடிந்தது? இந்தத்துறை எவ்வாறெல் லாம் இந்துக்களின் அடிப்படை உரிமைகளை வஞ்சிக்கின்றது? இந்தத்துறை மூலம் தமிழக அரசும் அதன் அதிகார, அரசியல் கூட்டங்களும் அடையும் எண்ணற்ற பயன்களும், இந்துக்களுக்கு ஏற்படும் இழப்புகளும் எவை எவை? அறக்கட்டளைத்துறை சட்டத்தில் வஞ்சனையாக நுழைக்கப்பட்ட 'ஷரத்துக்கள்' யாவை? ஒரு கோயிலையோ அல்லது அறக்கட்டளையோ இத்துறை தன் வசமாக்கச் செய்யும் மோசடிகளும், சட்டத்தை மீறிச் செயல்படும் தன்மைகள் யாவை? இவற்றையெல்லாம் நாம் அறிந்து கொள்ளுதல் இன்றையச் சூழலில் தேவையானதொன்றாகும். உண்மையில் இந்தத்துறைக்கு 'வானளாவிய' அதிகாரங்கள் உள்ளனவா? பலரும் அறியா உண்மைகள் பல உள்ளன.

1. அறக்கட்டளைத்துறை அதாவது HR&CE விரும்பினால் அஃது எந்தக் கோயிலையும் தன் முழுக்கட்டுப்பாட்டில் கொண்டு வரமுடியும் என்று பலரும் நம்பி வருகிறார்கள். இந்தக் கூற்றில் சிறிதும் உண்மையில்லை. எந்தக் கோயிலையும் தன் மனம் போனபடி எடுத்துக் கொள்ள இந்துசமய அறநிலையத் துறைக்கு எந்த அதிகாரமும் கிடையாது. சட்டங்களும், உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்றத் தீர்ப்புகளும் இவ்விஷயத்தை அதாவது அத்தகைய அதிகாரம் ஏதும் கிடையாது என்பதைக் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளன. ஆயினும் இச்சட்டங்களையும், தீர்ப்புகளையும் சிறிதும் மதியாமல் வேண்டுமென்றே - தான் செய்வது சட்ட மோசடி என்று தெரிந்தே - ஆயிரக்கணக்கான கோயில்களை இந்தத்துறை எடுத்துக் கொண்டு வருவதே இத்துறையின் மிகப்பெரிய மோசடி.

2. கோயில் நிர்வாகத்தை மேம்படுத்துதல்,பொது நன்மை அல்லது அரசுக் கொள்கை என்ற காரணங்களுக்காக ஒரு கோயிலின் நிர்வாகத்தை கைப்பற்ற இத்துறைக்கு எந்த அதிகாரமும்



சட்டப்படி கிடையாது. கோயில் நிர்வாகிகள் (அறங்காவலர்கள்) பெரும் தவறு செய்திருந்தால் மட்டுமே அவர்கள் அவ்வாறு தவறு இழைத்துள்ளனர் என்பதைத் தக்கசான்றுகளுடன் நிரூபித்த பின் கோயில் சொத்துக்களின் நிர்வாகத்தை அறநிலையத்துறை சட்டப்படி எடுத்துக் கொள்ள இயலும். ஒரு ''பொதுக் கோயிலின்'' (Public Temple) நிர்வாகம் குறித்து செய்யப்படும் விசாரணையில் இந்தத்துறை அந்தக்கோயில் நிர்வாகம் தங்கள் பக்கம் உள்ள நியாயங்களை எடுத்துரைக்க போதிய வாய்ப்புகள் கண்டிப்பாக அளிக்கபட வேண்டும்.

***(பொதுக்கோயில் என்று ஒன்றுமே கிடையாது. பொதுக் கோயில்களை நிர்வகிக்க எங்களுக்கு உரிமை இருக்கின்றது என்பது இந்தத்துறையின் வெற்று வாதங்களில் ஒன்று. எல்லாத் தரப்பு இந்துக்களும் வரும் கோயில் - இந்துக்களின் கோயிலே அன்றி பொதுக் கோயில் அன்று. எவ்வாறு பிற மத வழிபாட்டு தலங்களை அரசு நிர்வகிப்பதில்லையோ அது போன்றே இந்துக்களின் கோயில்களையும் நிர்வகிக்கக் கூடாது.)***

(3) நேர்மையான விசாரணை செய்த பின்பு அவசியம் இருந்தால் மட்டுமே செயல் அலுவலரை (Executive Officer) ஆணையர் நியமனம் செய்ய முடியும். ***(இதில் சட்டப்படி உள்ள உரிமையாக மட்டுமே பார்க்கப்பட வேண்டும். நியாயப்படி பார்த்தால் - மற்ற மத வழிபாட்டுத் தலங்களில் கை வைக்காத அரசு இந்துக் கோயில்களின் நிர்வாகத்தை மட்டும் எப்படி எடுத்துக் கொள்ளலாம்?)***

(4) ஆணையர் - (Commissioner) அவ்வாறு நியமனம் செய்யப்படும் செயல் அலுவலருக்கு கோயிலின் சொத்துக்களை நிர்வகிக்க மட்டுமே அதிகாரங்கள் வழங்க முடியும். கோயிலை நிர்வாகம் செய்ய அதிகாரம் அளிக்க முடியாது. அளிக்கக் கூடாது.

(5) மதம், மத நம்பிக்கை, வழிபாடு சம்பந்தப்பட்ட - ஆராதனை, திருவிழாக்கள், கும்பாபிஷேகம், தொன்மையான கோயில் பழக்க வழக்கங்கள் போன்ற விஷயங்களில் செயல் அலுவலருக்கோ, அறநிலையத்துறைக்கோ சட்டப்படி எந்தவித அதிகாரமும் கிடையாது. இதனை இந்துக்கள் நன்றாக நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

(6) செயல் அலுவலரின் நிர்வாக அலுவலகம் திருக் கோயில் உள்ளே இருத்தல் கூடாது. வழிபாட்டிற்குரிய மண்டபங் களைத்தவிர வேறு எந்த மண்டபங்களும், அரங்கங்களும் திருக்கோயில் வளாகத்தினுள் எழுப்பப்படக் கூடாது. ***(காட்டழகிய சிங்கர்கோயிலில் கலையரங்கம் கட்டுவது சட்டவிதிகளுக்கு முரணானது. இது குறித்து மதுரை உயர்நீதி மன்றக்கிளை அளித்த தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு விரைவில் செய்யப்பட உள்ளது.)***

(7) அறநிலையத்துறை அதிகாரிகளுக்கோ, செயல் அலுவலர்களுக்கோ, அறங்காவலர்களுக்கோ திருக்கோயில் பழக்க வழக்கங்களை மாற்றவோ, நிறுத்தவோ அல்லது புதிய வழக்கங்களை ஏற்படுத்தவோ அதிகாரம் சிறிதும் இல்லை. இதைச் சட்டம் மிகத் தெளிவாக கூறியுள்ளது. ***(இதன் அடிப்படையில் திருவரங்கத்தில் சமுதாயச் சீர்திருத்தம் என்ற பெயரில் முன்னாள் கோயில் இணைஆணையர் ஜெயராமன் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அந்தப் புனிதப்பணி விரைவில் மேற்கொள் ளப்படும். கோயில் இணை ஆணையர் விதிகளுக்குப் புறம்பாக ஒரு பழக்க வழக்கத்தை மாற்றுகிறார் என்று அதே துறையைச் சார்ந்த ஓர் அதிகாரியிடம் முறையிட வேண்டுமாம். இதற்குப் பெயர் 63 eஇன் கீழ் முறையீடு செய்வது என்று பெயர். இது எப்படியென்றால் துச்சாதனன் என்னைத் துகில் உரிந்தான் என்று துரியோதனனிடம் திரௌபதி முறையிட வேண்டுமாம் அதைப்போல உள்ளது. இந்தச் செயலைச் செய்யச்சொன்னதே துரியோதனன் தான். அதாவது இந்துசமய அறநிலையத்துறை ஆணையர். அவரிடம் என்ன நியாயம் கிடைக்கும். மக்களே சிந்தியுங்கள்.)***

(8) அறநிலையத்துறைக்கோ, செயல் அலுவலருக்கோ அர்ச்சனைக் கட்டணம், தரிசனக் கட்டணம் முதலிய கட்டணங் களை தீர்மானிக்க எந்த அதிகாரமும் கிடையாது. ***(50 ரூபாய், 250 ரூபாய், 1,000 ரூபாய் நுழைவுச்சீட்டுகள் மூலம் வசூல் செய்வதும், இதற்காக நம்பெருமாளை கோயில் வாசலில் பலமணிநேரம் காக்க வைப்பதும் திருவரங்கத்தில் அன்றாடக் காட்சிகளாகும். இவ்வாறு வசூல் செய்வது ''ஒரு பகற்கொள்ளை''.)***

(9) பிரஸாதக் கடைகளோ, வேறு கடைகளோ கோயிலுள் வைத்து நடத்தக் கூடாது. இவற்றை நடத்தவும், ஏலம் போடுவ



தற்கும் அறநிலையத்துறைக்கு எந்த அதிகாரமும் உரிமையும் இல்லை. கோடிக்கணக்கான ரூபாய்கள் இத்துறையினரால் முறை யற்ற வழியில் வசூலிக்கப்படுகிறது. இதுவும் ஒரு பகற் கொள்ளையே. இங்கு விற்கப்படுவன எவையும் பிரசதங்களே அல்ல. இப்பிரசாதக் கடைகள் அனைத்தும் பெரும் மோசடிகளே. இவற்றை தெருக்களில் அமைந்துள்ள உணவு விடுதிகளுக்குச் சமமாகக் கொள்ள வேண்டும். ஏனெனில் இங்கு தயாரிக்கப்படும் உணவு வகைகள் கோயிலுக்குரிய ஆசாரத்துடன் தயாரிக்கப்படுவ தில்லை. அங்குள்ள தெய்வங்களுக்குப் படைக்கப்படுவதும் இல்லை. மக்கள் நம்பிக்கையை காசாக்கும் துறையின் மோசடிகளில் இதுவும் ஒன்று.

(10) அறநிலையத்துறை தக்க காரணங்களுக்காக தன் நிர்வாகத்தின் கீழ் எடுத்துக் கொண்ட கோயில்களையோ அல்லது அறக் கட்டளைகளையோ எப்பொழுதும் தன் வசம் வைத்திருக்க முடியாது. மூன்று ஆண்டுகளில் திருப்பிக் கொடுத்து விட வேண்டும். அதிகபட்சம் ஐந்து ஆண்டுகள் தன்வசம் நிர்வாக சீர்த்தி ருத்திற்காக வைத்திருக்கலாம்.

(11) கோயில்களை நிர்வாகம் செய்ய அறநிலையத்துறை கோயில்களின் மொத்த வருமானத்திலிருந்து 12% சதவிகிதம் நிர்வாகக் கட்டணமாகவும், 4% சதவிகிதம் தணிக்கைக் கட்டண மாகவும் எடுத்துக் கொள்கிறது. நீங்கள் கோயிலுக்கு ரூ.100 நன் கொடை அளித்தால் அரசு கஜானாவிற்கு ரூ.16 கொடுத்திருக் கிறீர்கள் என்றுதான் அர்த்தம். இது நீங்கள் அறியாமல் செலுத்தும் வரி. உண்டியல், மற்ற வருமானங்கள் ஒழுங்காகக் கணக்கிடப் படுகின்றனவா என்பது ஐயத்திற்குரியது. கணக்குக் காட்டப்பட்டத் தொகையிலும் 16 சதவிகிதம் அரசு எடுத்துச் சென்று விடும். ***(இது இந்துமக்கள் மீது திணிக்கப்படும் ஜஸியா(?) வரியாகும். ஏனெனில் தன்னுடைய செலவினங்களுக்கு மேல் வருமானத்தைப் பெற்றுவரும் இந்துசமய அறநிலையத்துறை ஆண்டுகள் செல்லச்செல்ல வைப்பு நிதியாக பலகோடி ரூபாய்களை வங்கிகளில் வைத்திருக்கிறது. அவை முதிர்ச்சியடையும்போது அவற்றை எடுத்து செலவு செய்ய அந்தத் துறை முன்வருதில்லை. ஏனெனில் மேலும் மேலும் பெருத்த வருமானம் வருவதால் இந்த வைப்புநிதி பணத்தைக்கொண்டு அந்தத்துறை ஏதும் செய்வதில்லை. திருப்பணியா டொனேஷன் வாங்கு. மண்டகப்படியா***

***உபயம் வாங்கு. கும்பாபிஷேகத்திற்குச் செலவா இருக்கவே இருக்கி றார்கள் பெருபெருத்த நிறுவனங்கள். இந்தத்துறை அரசாங்கத்தின் ஓர் அங்கமாய் விளங்குவதால், இவ்வாறு முதிர்ச்சியடைந்த வைப்புநிதி அரசாங்கத்தால் ''பெயர் குறிப்பிடப்படாத வரவு'' என்ற தலைப்பில் அரசாங்க கஜானாவில் சேர்க்கப்படுகிறது. ஆகவே பலகோடி ரூபாய்களை உண்டியல்களில் போட்ட அப்பாவி இந்துக்கள் அரசாங் கத்திற்கு இந்துவாய் பிறந்த ஒரே பாவத்திற்காக மீண்டும் வரி செலுத்துகின்றனர். ஆனால் மற்றைய மதத்தவர்களோ தம் செல்வத்தை மேலும் மேலும் பெருக்கிக் கொள்கின்றனர். இந்துசமய அறநிலையத் துறையைப் பொருத்தவரை திருக்கோயில்கள் பொன் முட்டையிடும் ஓர் அபூர்வ வாத்து என்ற எண்ணமே கொண்டுள்ளனர்.)***

12. அறநிலையத்துறையின் மூலம் தமிழக அரசு ஆண்டுதோறும் நல்ல லாபம் ஈட்டி வருகிறது. இந்துசமய அறநிலையத்துறைக்கு அரசாங்கம் எந்தப் பணஉதவியும் செய்வ தில்லை. மாறாக பலகோடி ரூபாய்களை தன்வசமாக்கிக் கொள்கிறது. பழனி தேவஸ்தானம் பல இலட்சக்கணக்கான ரூபாய் களை, பழனியில் பேருந்து கட்டுவதற்கும், சாலைகள் அமைப்ப தற்கும், கழிப்பறைகள் கட்டுவதற்கும் செலவிட்டு உள்ளது. இந்த வசதிகளை இந்துக்கள் மட்டும்தானா உபயோகித்துக் கொள்கின் றனர். வஃப்போர்டு மற்றும் கிறிஸ்துவ மிஷினரிகளிடமிருந்து ஏன் கட்டாய வசூல் செய்யப்படவில்லை. **(இந்துக்கள் எவ்வாறு ஏமாற்றப்படுகிறார்கள் என்பதற்கு இது ஓர் உதாரணம்.)**

இதைத் தவிர தனக்குப் பணம் தேவைப்படும்போதோ, நிலங்கள் தேவைப்படும்போதோ கோயில் சொத்துகளில்தாம் அரசு முதலில் கைவைக்கிறது. பெரியார் சமத்துவபுரத்திற்கு கோயில் நிலங்களை தாரை வார்த்துக் கொடுத்துள்ளது இந்தத்துறை. அண்ணாத்துறை இறந்த தினத்தன்று திருக்கோயில் பணத்தில் சமபந்தி போஜனம் நடத்தப்படுகிறது. ஆட்சியாளர்களை திருப்தி செய்யத் தானே இவர்கள் இருக்கிறார்கள். கோயிலையும் அதன் சொத்துக்களையும் பாதுகாப்பதற்காக என்று நீங்கள் எண்ணங் கொண்டிருந்தால் அது உங்கள் தவறாகும்.

13. அறங்காவலர் தகுதி குறித்து இந்து அறக்கட்டளைச் சட்டம் எந்த தகுதியையும் குறிப்பிடவில்லை. அறங்காவலராக



அரசினாலும், அறநிலையத்துறையாலும் நியமிக்கப்படும் நபர் நான் ஓர் இந்து என்று சொல்லிக்கொண்டால் போதும். அவர் திவால் ஆகியிருக்கக்கூடாது. மனநிலை சரிஅல்லாதவராக இருக்கக் கூடாது. அவ்வளவுதாம் அவருக்கு வேண்டிய 'தகுதிகள்'. அவர் ஒரு கிரிமினலாகக்கூட இருக்கலாம்.

***(திருவரங்கம் பெரிய கோயிலுக்குச் சென்ற ஆட்சியில் நியமிக்கப்பட்ட ஓர் அறங்காவலர் நில அபகரிப்புப் புகாரில் கைது செய்யப்பட்டார். பெரிய ரவுடி என்று பெயர் பெற்ற இவர் குண்டர் சட்டத்திலும் சிறையில் அடைக்கப்பட்டார். திருச்சியில் நடை பெற்ற ஒரு கொலை வழக்கில் குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டுள்ளார்.)***

14 .இந்து சமய அறக்கட்டளைத்துறைச் சட்டம் 1959இல் (Hindu Religious and Charitable Endowments Act, 1959) உள்ள பல பிரிவுகள் - இந்த முக்கியமானப் பிரிவுகள் - அரசியல் நிர்ணயச் சட்டத்திற்கும், உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்றத் தீர்ப்புக்களுக்கு விரோதமானவை. இவை உடனடியாக இந்துசமய அறநிலையத் துறைச் சட்டத்திலிருந்து நீக்கப்படவேண்டியவை.

15 .தமிழ்நாட்டில் பல திருமடங்களும் ஆதீனங்களும் உள்ளன.இவை பல நுற்றாண்டுகளாக சமயப்பணியும், தமிழ்ப் பணியும் செய்து வருகின்றன. மேலும் இவை, தங்களுக்குச் சொந்தமான கோயில்களையும், வேத, தேவார, திவ்யப் பிரபந்த பாடசாலைகளையும், பல அறக்கட்டளைகளையும் பராமரித்தும், நிர்வகித்தும் வருகின்றன. இத்திருமடங்களுக்குச் சீடர்கள் உலகெங்கும் உள்ளனர். இத்திருமடங்களை நிர்வாகம் செய் யவோ, அதிகாரம் செய்யவோ, மேற்பார்வை செய்யவோ எந்தவித அதிகாரமும் இத்துறைக்குக் கிடையாது.

16. திருமடங்களின் திருக்கோயில்களையோ அல்லது அறக்கட்டளைகளையோ இந்தத்துறை நிர்வகிக்க முடியாது. அக்கோயில்கள், அறக்கட்டளைகள் ஆகியவற்றின் வருவாயி லிருந்து நிர்வாகக் கட்டணம் பெறக்கூடாது.

17. கோயில்களின் வருவாயிலிருந்து 16% சதவிகிதம் கட்டணமாக எடுத்துக் கொள்ளும் இந்த அறம் அற்ற துறை பல கோயில்களில் வருவாயில் 40% சதவிகிதம் சம்பளத் தொகையாக

செலவழிக்கிறது. கோயிலின் முக்கிய பணியாகிய வழிபாட்டிற்கு பல பெரிய கோயில்கள் தம் வருவாயிலிருந்து ஒரு சதவிகிதம் கூட செலவழிப்பதில்லை. முதிர்ச்சியடைந்த வைப்புநிதியிலிருந்து ஒரு பைசாக்கூட இந்துசமய அறநிலையத்துறை ஆணையரால் திருக்கோயில்களை வளப்படுத்துவதற்கும், ஆராதனங்கள் ஒழுங்கான முறையில் நடைபெறுவதற்கும் கொடுப்பதில்லை. அதைவிடக் கொடுமை. புரவலர்களிடமிருந்து திருப்பணிக்கென்று வசூலிக்கப்பட்ட (Gold Card System) 2.65 கோடி ரூபாய் வைப்பு நிதியாக வைக்கப்பட்டிருக்கிறது என்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஆணையர் தெரிவித்துள்ளார். அனைத்து மோசடிகளிலும் இதுவே தலையாய மோசடியும், நம்பிக்கை துரோகமும் ஆகும்.

18. திருக்கோயில்களுக்கும் அறக்கட்டளைகளுக்கும் சொந்தமாக 4.75 லட்சம் ஏக்கருக்கு மேல் நிலபுலன்கள் உள்ளன. இவற்றிலிருந்து கோயில்களுக்கும் அறக்கட்டளைகளுக்கும் நிர்ண யிக்கப்பட்ட மிகக் குறைவான வருமானம் கூட 20 -30 வருடங்களாக வரவில்லை. இது குறித்து அறம்அற்ற துறையினால் எந்த வித உண்மையான பயன் தரும் நடவடிக்கைகளும் எடுக்கப் படவில்லை.

19. திருக்கோயில் பெயரில், திருக்கோயில் நிதியிலிருந்து பல ஆடம்பர கார்கள் வாங்கியுள்ளது இவ்வறக்கட்டளைத் துறை. இவ்வாகனங்கள் பெரும்பாலும் இவ்வரசுத் துறை வாகனங்களாகப் பயன்படுகின்றன. சில வாகனங்கள் மந்திரிகள் உபயோகத்திற்கும், விஐபிக்கள், உபயோகத்திற்கும், தேர்தல் பணிகள் போன்ற கோயி லுக்குச் சிறிதும் தொடர்பில்லாத மற்ற பணிகளுக்கு உபயோகம் கொள்ளப்படுகிறது. பொள்ளாச்சி மாசாணி அம்மன் கோயில் நிதியிலிருந்து ரூ. 11 லட்சத்திற்குமேல் செலவழித்து வாங்கப்பட்ட இன்னோவா சொகுசுக்காரை அறநிலையத்துறையின் அரசுச் செயலாளரும், மயிலைக் கபாலி கோயிலிருந்து ஒரு ப்ரத்யேக வாகனம் அறநிலையத்துறை ஆணையரும் உபயோகித்து வந்துள்ளனர். (இவையெல்லாம் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் இந்தத்துறை தந்த பதில்களிலிருந்து திரட்டப்பட்டவை.)

(தொடர்ச்சி பக்கம் 65இல்)

# ஹரிதாஸரின்
# இருசமய விளக்கம்

*இதழ் 154இன் தொடர்ச்சி. விளக்கவுரை:புதுச்சேரி-பெருமாள் ராமாநுஜதாஸர்.*

**3ஆவது சிவபத முக்தி மறுப்புப் பரிச்சேதம்.**

**(பாடல்7இன் பொருள்.)** அந்தப் புண்டரீகனானவன் கங்கையின் கரையில் அழகானவோரிடத்தில் அமர்ந்து, ஊணுறக்கமற்று பன்னிரெண்டு ஆண்டு பஞ்சாட்சர மந்திரத்தால தியானஞ் செய்து தன் கண்ணைக் கொண்டு அர்ச்சனை செய்யவே;

**8. நெற்றியில் நெருப்புவிழி நின்மலன்**
**விளங்கஎதிர் நின்றருளிநின்**
**நற்றவம் உவந்தனம் மனநினை(வு)**
**ஏதுநவில் நல்கு துமெனச்**
**சற்றுறு களிப்பினன் முகிழ்த்திடு**
**தடக்கைகள் தரித்தமவுலிக்**
**கொற்றவன் மதிப்புடைய காசிவள**
**நாடுடைய கோளரிசொல்வான்;**

**(இ.பொ.)** இங்ஙனம் இவன் செய்த அருந்தவத்திற்குகந்த நெற்றிக் கண்ணையுடைய சிவன், பவுண்டரீகன் எதிரில் தோன்றி அவனை நோக்கி, ‘அப்பா! நீ செய்த அரும்பெருந்தவத்தைக் கண்டு மகிழ்ந்தோம். நீ மனத்தில் விரும்பியதைக் கேட்பாய். அதனைத் தடையின்றிக் கொடுக்கிறோம்’ என்று கூற, நீண்டகைகளையுடைய மகுடம் தரித்த புண்டரீகனான காசிதேயத்தின் பதியான அவ்வரசன் கூறுவான்;

**வேறு**

**(எழுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்)**

**9. ஈசகே ளரவிந்தம் எனுங்கணும் ஏம**
**வாடையும் எண்திசை யுங்கிளர்**
**தேசுகூர் முடியும் தனுவும் கதைசே**
**மவாழியும் வலம்புரி கொண்டெழில்**

**வீசு நாலு கரங்களும் நன்கொடி**
**மீது நீள்கரு டன்திகழ் அங்கமும்**
**வாசுதே வன்னனும் பெயரும் கொடுவா**
**முமாறு வரந்தரு கென்றனன்.**

**(இ.பொ.)** சிவபெருமானே! எனக்குச் செந்தாமரை போன்று உள்ள கண்களும், அழகிய பீதகவாடையும், எண்திசையும் விளங்கு கின்ற நீண்டமுடியும், நான்கு கைகளும், சக்கரம் சங்கு வில் வாள் கதை என்ற பஞ்சாயுதங்களும், கருடக் கொடியும், வாசுதேவன் என்ற பெயரும் உண்டாகுமாறு அருள்புரியவேண்டும் என்று கேட்டான்;

10. **பகருநீள் வருடம் பனிரண் டிடைபகல்**
**இராவும் மறந்து திடங்கொடு**
**நிகரில் மேனி வருந்தவ ருந்தலின்**
**நியமமான தவங்கள் புரிந்தவன்**
**மகிமை யான பதங்கள் இரந்திலன்**
**மருவினா ரிலொன்றும உணர்ந்திலன்**
**மிகைசெய் தானென நெஞ்சினில் அங்கவன்**
**விபரகீ னமறிந்தும் இரங்கியே;**

**(இ.பொ.)** அப்பொழுது சிவன், 'இவன் பன்னீராண்டு பகலும் இரவும் மறந்து திடமான மனத்துடன் தன்னுடல் வருந்த நியமமான தவத்தைச் செய்தனன்; சிறந்த பதவிகளை விரும்பினா னில்லை; இத்தகைய வரத்தைப் பிறர் விரும்பினார் இல்லையே என்று மதித்தானில்லை; ஆசையின் மிகுதியால் இங்ஙனம் கேட்டா னென்று';

11. **வரமளித் தனன்வா னவர்நா யகன்வடி**
**வமைப்புயல் போல்எழில் மேயது**
**கருடன் மெய்க்கொடியா யதுநால் விதகர**
**தலத்திடை வால்வளை யாழியோ(டு)**
**உரிய பற்பக தாயுத நீடிய**
**உடையினிற் றுகில்பீத கமானது**
**வரிசை மிக்குயர் காசிமகி பனும்மன**
**மகிழ்ச்சியுடன் மாளிகை மேவினான்.**

(தொடரும்)



# திருவிருத்தத்தில் அகஇலக்கியக் கோட்பாடுகள்

இதழ் 154இன் தொடர்ச்சி. ஆசிரியர்: ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ அ. கிருஷ்ணமாசார்யர்.

அல்லறி தொடர்ச்சி:

**186. தலைமகன் புலந்துபோதல்.**

தலைவன் புலந்து போதல் என்பது, தலைவன் தான் குறித்து குறியிலிருந்து தலைவி அல்லகுறிப்பட்டு வாராமையாற் புலந்து தன் ஊர்க்குப் போதல்.

**இத்துணையும் எட்டாம்நாள் செய்தியென் றுணர்க.**

**187. வறுங்களந் (ஒன்றுமில்லா - ஒருவரும் இல்லா) தலைவி கண்டிரங்கல் (தலைவன் நீங்கியவதனாற் பயன் படாத களம்)**

புலர்ந்தபின் வறுங்களந் தலைவிகண்டு இரங்கல் என்பது, ஒன்பதாநாள் இருள் புலர்ந்தபின் தலைவி வறுங்களங் கண்டு இரங்கல்.

**188. தலைவி பாங்கிக்குரைத்தல் (தலைவி தன்றுணைக் குரைத்தல்)**

பாங்கியிடம் தலைவி நடந்தவற்றை கூறுதல்.

**189. தலைமகள் அவலம் பாங்கி தணித்தல்.**

தலைமகள் அவலம் பாங்கி தணித்தல் என்பது, தலைமகளது துன்பத்தைப் பாங்கி தணித்துக் கூறல்.

**190. இறைவன்மேற் பாங்கி குறிபிழைப் பேற்றல்.**

இறைவன்மேற் பாங்கி குறி பிழைப்பு ஏற்றல்

என்பது, ஒன்பதாம்நாள் இரவுக்குறிக்கு வந்த இறைவன்மேற் பாங்கி அல்ல குறிப்பிட்ட குற்றம் ஏற்றிக் கூறல்.

**191. இறைவிமேல் இறைவன் குறியிழைப் பேற்றல்.**

இறைவிமேல் இறைவன் குறிபிழைப்பு ஏற்றல் என்பது, தலைவிமேல் தலைவன் அல்லகுறிப்பட்ட குற்றம் ஏற்றிக் கூறுதல்.

**192. அவள் குறிமருண்டமை அவள் அவற்கு இயம்பல்.**

அவள் குறிமருண்டமை அவள் அவற்கு இயல்பல் என்பது, தலைவி குறிமயங்கியது பாங்கி தலவற்கு உணர்த்தல்.

**193. அவன்மொழிக் கொடுமைசென்று அவள் அவட்கு இயம்பல்.**

அவன் மொழிக் கொடுமைசென்று அவள் அவட்கு இயம்பல் என்பது, தலைவன் சொல்லிய கொடுமையைத் தோழி தலைமகட்குச் சொல்லல்.

**194. என்பிழைப்பு அன்றென்று இறைவி நோதல்.**

என் பிழைப்பு அன்றென்று இறைவி நோதல் என்பது, குறி பிழைத்தது என்பிழை யன்றென்று இறைவி நொந்து கூறல்.

**இத்துணையும் பகற்செய்தியென்று உணர்க. அல்லகுறி முற்றிற்று.**

வருந்தொழிற்கருமை

**195. தாய் துஞ்சாமை**

தாய் துஞ்சாமை என்பது, தாய் விழித்திருத்தல்.



**196. நாய் துஞ்சாமை**

நாய் துஞ்சாமை என்பது, தாய் துஞ்சியபின் ஊரிலிருக்கும் நாய் துஞ்சாமை.

**197. ஊர் துஞ்சாமை**

ஊர் துஞ்சாமை என்பது, நாய் துஞ்சினும் ஊரிலுள்ளார் துஞ்சாதிருத்தல்; இடத்து நிகழ்பொருளின் தொழில் இடத்து மேல் நின்றது.

**198. காவலர் கடுகுதல்**

காவலர் கடுகுதல் என்பது, நகர்காப்போர் துடியடித்துக் கொண்டு ஊர்சுற்றிக் கடுகி வருதல்.

**199. நிலவு வெளிப்படுதல்**

நிலவு வெளிப்படுதல் என்பது, தலைவன் வருதற்கு இடையூறாய் நிலவு வெளிப்படுதல்

**200. கூகை குழறுதல்**

கூகை குழறுதல் என்பது, கூகை குழறக்கேட்ட தலைவி அஞ்சிக் கூறுதல்.

**201. கோழி குரல்காட்டுதல்**

கோழி குரல் காட்டுதல் என்பது, இருவர்க்கும் இடையூறாய்க் கோழி குரல் காட்டுதல்

**இரவுக்குறி இடையீட்டில் வருந்தொழிற் கருமை ஏழிற்கும் ஒவ்வொன்றுக்கு நன்நான்கு நாழிகையாகக் கொள்வது.**

**இத்துணையும் ஒன்பதாநாட் செய்தியென் றுணர்க.**

**இரவுக்குறி இடையீடு முற்றிற்று**

(தொடரும்)

# இந்து சமய இதழ்கள் ஓர் ஆய்வு

இதழ் 152இன் தொடர்ச்சி. ஆசிரியர்: அ.மா. சாமி.

**ஸ்ரீ இராமானுச குருகுலம் (1966):** மாதம். சென்னை. ஆசிரியர் புலவனூர் பார்த்தசாரதி.

**ஸ்ரீ இராமானுச தசோகம் (1995):** மாதம். மும்பாய். ஸ்ரீ பகவத் இராமானுச சித்தாந்த பிரசார சபை வெளியீடு. ஆங்கில இதழ். தமிழும் இடம் பெற்றிருந்தது. செய்திக் கடிதம். தனிச் சுற்றுக்கு.

**ஸ்ரீ இராமானுச வாணி (1977):** காலாண்டு. சென்னை. ஆசிரியர் எம். என். பார்த்தசாரதி. இராமானுச வேதாந்த மைய வெளியீடு. தமிழ், வடமொழி, இந்தி, ஆங்கிமொழி இதழ்.

**ஸ்ரீ இராமானுச ஸித்தாந்த வைஜயந்தீ (1935):** மாதம். சென்னை. ஆசிரியர் பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியார். இராமானுச தரிசன சமஸ்தாபந சபையின் சார்பில் அதன் செயலாளர் வடகரை இராமானுசதாசன் வெளியிட்டார். இவர் எழுதிய ஒரு மறுப்புக் கட்டுரையைத் திருச்சியில் வெளிவந்த ஸ்ரீதேசிக ஸ்ரீ ஸூக்தி சம்ரட்சணி என்ற இதழ் (ஆசிரியர் ஏ.வி. கோபாலாசாரியார்) முழுமையாக வெளியிடவில்லை. அதன் காரணமாக இந்த இதழைத் தொடங்கினார்! முதல் இதழ் 1935 நவம்பரில் வெளிவந்தது. அதற்கு முன்பு அக்டோபரில் ''ஸ்ரீஇராமானுஜ சித்தாந்த வைஜயந்தி'' என்னும் சத்சம்பிரதாய அர்த்த பிரகாசந பத்திரிகையின் உதயமாகிற சூரியோதயத்திற்கு அருணோதயம்'' என்ற பெயரில் 32 பக்க இதழ் ஒன்று வெளியிடப்பட்டது.

**ஸ்ரீவசனபூஷணசாரம் (1930).** மாதம். காஞ்சிபுரம். ஆசிரியர் அண்ணங்கராச்சாரியார். பிள்ளைலோகாசாரியார் அருளிய ''ஸ்ரீவசன பூஷணம்'' தமிழ்மொழி பெயர்ப்பு. தமிழ், வடமொழி இரு மொழி இதழ்.

**ஸ்ரீவாணீ விலாஸினீ (1905).** மாதம் திருவரங்கம். ஆசிரியர். டி.கே. பாலசுப்பிரமணிய அய்யர். இலக்கிய இதழ் என்றாலும், சரசுவதி பூஜைக்கும்,



சங்கராந்திக்கும் மலர் வெளியிட்டது. வழக்கமான இதழ், நூறு பக்கம். மலர்கள் இரு நூறு பக்கம். பக்க எண்கள் தொடராகக் கொடுக்கப்பட்டன. தொடர் எண்: சஞ்சிகை 54.

**ஸ்ரீவிஷ்ணுபுராணம் (1890).** மாதம். சென்னை. ''ஞானபானு'' இதழின் துணை இதழாக வெளியிடப்பட்டது. விஷ்ணு புராணம் தொடர்ந்து வெளியிடப்பட்டது.

**ஸ்ரீவேதாந்த தீபிகை (1910).** மாதம். சென்னை. ஆசிரியர் திவான் பகதூர் தி.த.ரெங்காச்சாரியார். தொடர் எண்கள்: சம்.28 சஞ். 1. வைஷ்ணவ சித்தாந்த பிரசாரசபை வெளியீடு.

இதன் 1939 ஆகஸ்டு இதழில் கோவில் நுழைவை எதிர்த்து ''ஆலயப் பிரவேசக் கிளர்ச்சி'' என்ற தலையங்கம் எழுதப்பட்டிருக்கிறது. அதில்..... ஒரு கிராமத்தில் பஞ்சமர் புகுந்தால் அந்த பஞ்சமன் வசிக்கும் வரை அந்த கிராமத்தில் வேதஉபநயனமும் வைதீகக் கிரியைகளும் அன்னபானமும் செய்யக்கூடாது என்று ஏற்பட்டிருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு ரீதியைத் தேவாலயத்தில் எப்படி அநுமதிப்பார்களோ, தெரியவில்லை. அளவற்ற நிலங்கள் பயிரிட யோக்கியதை இல்லாமல் தரிசு போடப்பட்டிருக்கின்றன. பஞ்சமர்களைக் கொண்டு கிருஷி விவசாயத்தை ஏராளமாய் விருத்தி செய்யலாம்.''

**ஸ்ரீவைகானசன் (1922).** மாதம் சென்னை.

**ஸ்ரீவைணவன் (1925).** மாதம். நெல்லை. ஆசிரியர். டி.ஆர். பெரிய நம்பியா பிள்ளை. கொல்லம் ஆண்டு (கொல்லம் 1107) பயன்படுத்தப்பட்டது. நம்மாழ்வார் பிள்ளைத் தமிழ் இவ்விதழில் முதன் முதல் அச்சேறியது. தொடர் எண்கள். தொகுதி 5, பகுதி 1. ''உண்மை அறிவைப் புகட்டும் ஒரு மாதாந்திரத் தமிழ்ப் பத்திரிகை'' என்ற அறிவிப்புடன் வெளிவந்தது. ''எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு'' என்ற குறள் தலைப்பில் இடம் பெற்றது. தனி இதழ் 2 அணா. ஆண்டுக் கையொப்பம் ரூ1. அபிமான நன்கொடை ரூ. 25.

**ஸ்ரீவைதீக மத தீபிகை (1933).** மாதம். ஆசிரியர். எஸ். வாசுதேவ ஆச்சாரியார். வைணவ சித்தாந்த பிரசார சபை வெளியீடு.

**ஸ்ரீ வைஷ்ணவ கிரந்த முத்ரா சபா வரிசை (1914).** மாதம். காஞ்சிபுரம். தமிழ், தெலுங்கு. வடமொழி.

**ஸ்ரீ வைஷ்ணவம் (1979)** காலாண்டு. சென்னை. ஆசிரியர் கே.எஸ். நரசிம்மன். ஸ்ரீகோவில் கந்தாடை அண்ணன் சுவாமி சிஷ்ய சபை வெளியீடு.

**ஸ்ரீ ஸ்ரீரங்க சடஜித் கிருபா (1998).** மாதம். சென்னை. ஆசிரியர் குழு. ''பிரமாதி தை உத்திராடம்'' என்று வெளிவந்த நாள் குறிப்பிடப்பட்டுள்ளது. தொடர் எண். புஷ்பம் 21.

**ஸ்ரீமத் பகவத்கீதை கீதார்த்த சந்திரிகா (1899).** மாதம். சென்னை. ஆசிரியர் எண்பது கவனர் லெட்சுமணன். பிப்ரவரியில் தொடங்கியது. தமிழ், வடமொழி. 32 பக்கம். விலை 1 அணா 6 பைசா. விற்பனை 400 படி. இவ்விதழ் தெலுங்கு, வடமொழியிலும் இதே பெயரில் தனியே வெளிவந்தது.

**ஸ்ரீமத் பாகவதம் (1909).** மாதம். சென்னை. தொடர் எண். இதழ்1.

**ஸ்ரீமத் பாகவத தமிழ் வசனம் (1909).** மாதம். சென்னை. தொடர் எண். புராணம் 1.

**ஸ்ரீமத் பகவத்கீதையும் ஸ்ரீசங்கராசார்ய பாஷ்யமும் (1907).** மாதம். சென்னை. ஆசிரியர். டி.பி. பார்த்தசாரதி அய்யங்கார். 32 பக்கம். விலை 4 அணா.

**ஸ்ரீமத் இராமாயணம் (1910).** மாதம். சென்னை.

**ஸ்ரீமத் இராமாயணம் உரையுடன் (1900).** மாதம். சென்னை. ஆசிரியர் சீனிவாச ராகவன். ஜுலையில் தொடங்கியது 20 பக்கம். விலை 3 அணா. விற்பனை 500 படி.

**ஸ்ரீமத் இராமாயணம் சுந்தர காண்டம் (1890).** மாதம். சென்னை. ஆசிரியர் சீனிவாச இராகவன். தமிழ், தெலுங்கு, வடமொழி. 20 பக்கம். விலை 3 அணா. பிப்ரவரி முதல் வெளிவந்தது. விற்பனை 1000 படி.

**ஸ்ரீமத் வால்மீகி இராமாயணம் (1909).** மாதம். வால்மீகி இராமாயணம் தமிழ் உரையுடன் வெளியிடப்பட்டது.

**ஸ்ரீமத் வால்மீகி இராமாயண வசனம் (1886).** மாதம் இருமுறை. சென்னை. ஆசிரியர். கே. சீனிவாச ராகவன். தமிழ், தெலுங்கு, வடமொழி. 32 பக்கம். விற்பனை 1000 படி. விலை 4 அணா. 1877இல் இதே பெயரில் ஓர் இதழ் வெளிவந்தது.

முற்றும்



# வேதநாயகன் விஷ்ணுவே

இதழ் 154இன் தொடர்ச்சி. ஆசிரியர்: இரும்பாநாடு ஸ்ரீ.உ.வே.சே.பத்மநாபன்.

**நமோ மித்ரஸ்ய வருணஸ்ய சக்ஷஸே**
**மஹோ தே$_3$வாய தத்$_3$ருதம் ஸபர்யத |**
**தூ$_3$ரேத்$_3$ருஶே தே$_3$வஜாதாய கேதவே**
**தி$_3$வஸ்புத்ராய ஸூர்யாய ஶம்ஸத ||**

(ரிக் - 10-37-1)

**இதன் பொருள்:** மித்ரா வருணர்களுடைய கண்ணுக்கு வணக்கம் செலுத்துங்கள். வெகுதூரத்தில் உள்ளவற்றையும் பார்ப்பவனும் தேவஜன்மமுடையவனும் ஒளிக்கொடியுள்ளவனும் ஒளியுலகின் புத்ரனுமான சூரியனுக்கு துதிகளைக் கூறுங்கள்.

இந்த மந்திரத்தில் சூரியனின் பிறப்பு சொல்லப்படுகிறது.

**மஹி ஜ்யோதிர்பி$_3$ப்$_3$ருதம் த்வா விசக்ஷண**
**ப$_3$ாஸ்வந்தம் ச க்ஷுஷே ச க்ஷுஷே மய:|**
**ஆரோஹந்தம் ப$_3$ருஹத: பாஜஸஸ்பரி**
**வயம் ஜீவா: ப்ரதி பஶ்யேம ஸூர்ய||**

(ரிக் - 10-37-8)

**இதன் பொருள்:** சூரியனே! சிறந்த ஒளியைத் தருபவனும், தூரத்தில் பார்ப்பவனும், பிரகாசமானவனும், ஒவ்வொரு கண்ணுக்கும் மகிழ்ச்சி தருபவனும், உயர்ந்தொளிரும் பரந்த கடலிலிருந்து எழுபவனுமான உன்னை நாங்கள் தினமும் காண நீடுழி வாழ வேண்டும்.

**யத்$_3$வோ தே$_3$வாஶ்சக்ரும ஜிஹ்வாயா கு$_3$ரு**
**மநஸோ வா ப்ரயுதீ தேவஹேளநம்|**
**அரா வா யோ நோ அபி$_4$ து$_3$ச்சு$_2$நாயதே**
**தஸ்மிந்ததே$_3$நோ வஸவோ நிதே$_4$தந||**

(ரிக்: 10-37-12)

**இதன் பொருள்:** தேவர்களே! வசுக்களே! நாங்கள் மனதாலும் வாக்காலும் தேவர்களுக்கு ஏதேனும் குற்றம் செய்திருந்தால் அதனால் ஏற்படும் பாபத்தை எங்களைப் பெரிய துன்பத்தில் ஆழ்த்தும் கொடியவனிடம் செலுத்திவிடுங்கள்.

ஸவிதா என்ற பெயரிலும் சூரியன் அழைக்கப்படுகிறான். ஸவிதாவைப் பற்றிய தனித்த ஸூக்தங்களும் இருக்கின்றன. அவற்றிலும் சூரியனுக்குரிய செயல்பாடுகளே சொல்லப் படுகின்றன. சூரியனிலிருந்து ஸவிதாவை வேறுபடுத்திக் கூறும் மந்திரங்களும் காணப்படுகின்றன. உஷை என்பது விடியற்காலைப் பொழுதின் அபிமானி தேவதை. விடியற்கால சூரிய ஒளி உஷை என்ற பெண் தேவதையின் ஆதிக்கத்துக் குட்டபட்ட தாகும். உஷை பற்றிய தனித்த ஸூக்தங்களும் காணப்படுகின்றன. பகன் செல்வத்தை வழங்கும் தேவதை. அவனும் ஒளியுள்ளவனே. பகனைப் பற்றிய மந்திரங்களும் காணப்படுகின்றன. பூஷாவும் ஒளியுள்ள தேவனே. கால்நடைச் செல்வத்தை வழங்குவனும் அவற்றைக் காப்பவனுமாக பூஷா வேதத்தில் சொல்லப்படுகிறான்.

ஸவிதாவை பற்றிய ஸூக்தங்களில் சூரியனுக்கான செயல்பாடுகளான உதித்தல், ஒளிபரத்துதல், அஸ்தமித்தல் முதலியவை காணப்படுவதால் ஸவிதாவை சூரியன் என்றே சொல்லலாம். சில இடங்களில் ஸவிதா வேறு உருவமுள்ள தேவதையாகவும் சொல்லப்படுகிறது. பல்வேறு சந்தர்ப்பங்களின் சூரியனே, ஸவிதாபகன் பூஷன் என்ற பெயர்களில் அழைக்கப் படுகிறான் என்று யாஸ்க நிருக்தம் கூறுகிறது. ஆனால் அந்த தேவர்களுக்கு வேறு உருவங்களும், வேறுசெயல்பாடுகளும், வேறு தனிப்பட்ட ஸூக்தங்களும் வந்திருப்பதற்கான காரணத்தை நிருக்த சாஸ்த்ரம் தெளிவாக விளக்கவில்லை. எப்படியிருந்தாலும், இந்த தேவதைகள் யாரிடத்தும் பரமாத்ம லக்ஷணங்கள் இருப்பதாக வேதம் கூறவில்லை. இவர்களிடமும் மக்கள் தங்களின் உலகியல் தேவதைகளுக்காகவே வேண்டுகிறார்கள் சூரியன் உள்ளிட்ட இவர்கள் அனைவருமே படைக்கப்பட்டவர்கள் பிறந்தவர்கள் என்று வேதம் கூறுகிறபடியால் இவர்கள் யாருமே பரம்பொருள் அல்லர் என்பது தெளிவு.



ப்ரத்யக்ஷத்தில் மஹத்தான தேவனாகப் போற்றப்படும் சூரியன் மற்றவர்களின் ஆற்றலைக்கொண்டே லோக விவகாரத்தை நிர்வஹிக்கிறான் என்பதை வேதம் தெளிவாகக் காட்டுகிறது.

**உத்ஸூர்யோம் ப்$_3$ருஹத$_3$ர் சீஷ்யஶ்ரேத்புரு**
**விஶ்வா ஜநிம மாநுஷாணாம் |**
**ஸமோ தி$_3$வா த$_3$த்$_3$ருஶே ரோசமாந:**
**க்ரத்வா க்ருத: ஸுக்ருத: கர்த்ருபி$_4$ர்பூ$_4$த் ||**

(ரிக் - 7-6 2-1)

**இதன் பொருள்:** சூரியன் தனது பிரகாசமான ஒளிக்கதிர் களை எல்லா மானிட இனங்கள் மீதும் செலுத்துகிறான். அவனை ஆக்கியவர்களால் சக்தி ஞானம் இவற்றோடு நன்றாக அமைக்கப் பட்ட அவன் ஒளி உலகோடு சேர்ந்து பிரகாசமாக ஒளிர்கிறான்.

இந்த மந்திரத்தில் சூரியனின் சக்தி மற்றவர்களால் ஆக்கப்பட்டது என்பது சொல்லப்படுகிறது. சூரியனும் ஆதித்யர் களின் கூட்டத்தைச் சேர்ந்தவனே என்றாலும் மற்ற ஆதித்யர் களிடமிருந்து (மித்ரா வருணர்களிடமிருந்து) ஆற்றலைப் பெறுப வனாகச் சொல்லப்படுகிறதே யொழிய சூரியனிடமிருந்து மற்ற ஆதித்யர்கள் ஆற்றல் பெறுவதாக வேதத்தில் சொல்லப் படவில்லை.

''ஒவ்வொரு தேவதையும் அது துதிக்கப்படும்பொழுது உயர்வாகவே போற்றப்படுகிறது; அதனால் தேவதைகளுக்குள் உயர்வு தாழ்வு இல்லை'' என்று வேதத்தை ஆய்வு செய்யும் சிலர் கூறுகிறார்கள். அவர்கள் வேதத்தை ஆழமாக ஆய்திருந்தால் இப்படிக் கூறியிருக்கமாட்டார்கள்.

மேலோட்டமாகப் பார்த்தால் எல்லா தேவதைகளுக்குமே ஒரே விதமாகத் துதிகள் வந்துள்ளது போல் தோன்றும்.

ஆனால் ஆழமாக வேதத்தை ஆராய்ந்தால் தேவதைகளுக்கு இடையே உள்ள வேற்றுமைகளும் உயர்வு தாழ்வுகளும் தெளிவாகத் தெரியும். சூரியனும் அதிதிக்குப் பிறந்தவன் என்றாலும் அந்த அதிதிக்கே பிறந்த மற்ற ஆதித்யர்களான மித்ரா

வருணர்கள்தான் அவனுக்குச் சக்தி அளிக்கிறார்கள். பிரபஞ்ச நியதியின் காவலர்களும் அரசர்களுமான அந்த மித்ரா வருணர் களுக்கும் சூரியன் முதலிய மற்ற தேவர்களுக்கும் அந்த அதிதிக்கே பிறந்த இந்திரன் தலைவனாக இருக்கிறான். இந்த அடிப்படையில் தான் தேவதைக்குள் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படுகின்றன. இந்த ஏற்றத்தாழ்வுகள் அந்தந்த தேவதைகளின் தனித்தன்மைகளால் தான் ஏற்படுகின்றன.

'ஒளியால் ப்ரகாசிக்கிறான்' என்ற பொருளில் எடுத்துக் கொண்டாலும் 'அதிதியின் புத்ரன்' என்ற பொருளில் எடுத்துக் கொண்டாலும் எல்லா ஆதித்யர்களும் ஒரே தகுதியை உடையவர்கள் தானே இதில் என்ன தாரதம்யம்; என்பது சிலருடைய வாதம். ஆனால் அந்த வாதம் பலவீனமானது. 'ஒளியால் பிரகாசிக்கிறான்' என்ற அடிப்படையில் பார்த்தால் எல்லோருக்கும் ஒரே அளவிலான ஒளியுள்ளதாகக் கூறமுடியாது. இதையும் வேதமே தெளிவாக்குகிறது. மித்ராவருணர்களே சூரியனை இயக்குகிறார்கள் என்றும் அவர்களுடைய கண்ணே சூரியன் என்றும் சொல்லப் படுகிறதேயொழிய, எல்லா ஆதித்யர்களுமே சமமான சக்தி யுடையவர்கள் என்று சொல்லப்படவில்லை. மித்ரா வருணர்களின் ஒளியைத்தான் சூரியன் போர்த்திக் கொண்டு எழுகிறான் என்று வேதம் கூறுகிறது. மித்ரா வருணர்களுக்கு சூரியனிடமிருந்து சக்தி கிடைப்பதாக வேதம் எவ்விடத்திலும் கூறவில்லை. இதனால் உயர்வு தாழ்வு தெளிவாகவே உள்ளது.

அதாவது, ஒளியுள்ள பல பொருட்களை ஒன்றன் பின் ஒன்றாக நீள் வரிசையில் நிறுத்தி வைத்தால் நமக்கு பக்கத்தில், அருகில் உள்ள அந்த முதல் பொருளே மிகுந்த ஒளியுடையதாகத் தெரியும், அதற்குப் பின்னால் இருக்கும் பொருட்களின் தோற்றமோ ஒளியோ நமக்குத் தெளிவாகத் தெரியாது. நமக்கு அருகில் நம் கண்களுக்கு புலப்படும் அந்தப் ஒளிப்பொருள் இயற்கையில் ஒளி குறைந்ததாக இருந்தாலும் அதற்குப் பின்னால் நம் கண்களில் புலப்படாமல் இருக்கும் பல ஒளிப்பொருள்களின் ஒளிகளையும் பெற்றே நம் கண்களுக்குப் மிகப் பிரகாசமாக ஒளிர்கிறது.

(தொடரும்)



# மாறன் பாப்பாவினம்

இதழ் 154இன் தொடர்ச்சி. டாக்டர். அருட்கவி அரங்க சீனிவாசன்.

பேதமையார் இறந்துபிறந்து உழல்வன் எனப்பேதுறா
மூதறிவார் அழியாத முதல்வன்எனத் தெளிந்துளாய்!
சாபத்தால் இழுக்கமுறாத் தலைமையால்! சாபமடைந்து
ஆபத்துஆ யினர்சரண்என்று அடைதருமாங்கு அருள்தரிவாய்!

(இவையிரண்டும் ஈரடி அம்போதரங்கம். இவை பேரெண்.)

வேதனும்முற் றுணர்வல்எனில் அறிவரிய மேன்மையாய்!
ஆதரவுற் றிடும்எளியர்க்கு அறிவெளிய பான்மையாய்!
நினைபவர்தாம் நினைவுறும்அவ் உருவமதாய் வெளிநிற்பாய்!
அனைவரும்கண் டால்வியப்புற்று ஆசிபகர்ந்து எழுபொற்பாய்!

(இவை நான்கும் நாற்சீர் ஓரடி நாலம்போதரங்கம். இவை அளவெண்.)

திகிரியை உயர்வலம் தரித்துளாய்!
திகழ்வரி வளைஇடம் பரித்துளாய்!
புகர்முக மதமலை சொலச்செல்வாய்!
பொருமுத லையின்உயிர் செலக்கொல்வாய்!
இரணியன் மார்பது பிளந்துளாய்!
இருநில மூவடி யளந்துளாய்!
அரண்இயல் ஆர்கலி அடைத்துளாய்!
அதனிடை ஏழ்மதிள் புடைத்துளாய்!

(இவை எட்டும் முச்சீர் ஓரடி இடைஎண்.)

தேன்இமிர் துளபத்தாய்!
செனனமது உளபத்தாய்!
ஈனரது இடம்எய்தாய்
எழும்எழு மரம்எய்தாய்

அலகையின் உயிர்கொன்றாய்!
அறன்அலது அருகுஒன்றாய்!
உலகமது உறுதுப்பாய்!
உரலிடை அடர்துப்பாய்!
மறைமொழி யினும்எட்டாய்!
வரைபொருள் உரைஎட்டாய்
உறைதயி ரதுகட்டாய்
உரைபுகழ் பலகட்டாய்!
அகல்மலை கவிகையுளாய்
அழல்பெருகு அவிகையுளாய்!
சகடமது உதைமைந்தாய்!
தகவின ருள் அமைந்தாய்!
இவை பதினாறும் இருசீர் ஓரடி.சிற்றெண்.)

என ஆங்கு

(இது தனிச்சொல்)

பரத்துவ முதலாப் பரந்துள ஐந்தாய்
வரத்துடன் மூவுரு வாகிய வரத
திருக்குரு கூரநின் திருவடி வழுத்துதும்
எம்கோன் திருமகிழ் மார்பினன் இயற்றமிழ்
ஊழிதொ றூழிஎவ் வுலகினும்
வாழிய தாக வளர்க்கநீ எனவே!

இஃது ஆறடித்தாய் நேரிசை யாசிரியப்பாவினால் இற்ற சுரிதகம்

இது தரவு தாழிசை எண் தனிச்சொல் சுரிதகம் எனும் ஐந்துறுப்பினால் வந்த வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா. என்னை.

''ஏனை ஒன்றே தேவர் பரா அ முன்னிலைக் கண்ணே'',

''அதுவே வண்ணக ஒருபோகு என இரு வகைத்தே''

''வண்ணகந் தானே,
தரவே தாழிசை எண்ணே வாரம்என்று
அந்நால் வகையின் தோன்றும் என்ப''



''தரவே தானும்நான்கும் ஆறும் எட்டும் என்ற
நேரடி பற்றிய நிலைமைத் தாகும்''

''ஒத்துமூன்று ஆகும் ஒத்தா ழிசையே''
தொல். செய்யுள். 138.142).

(ஒத்த தாழிசையை ஒத்தாழிசை என்றது வினைத்தொகை)

''அடக்கியல் வாரம் தரவோடு ஒக்கும்
முதல்தொடை சுருங்கும்மன் எண்ணே''

''எண்ணிடை ஒழிதல் ஏதம் இன்றே
சின்னம் இல்லாக் காலை ஆன''
தொல். செய். 144, 146.

என்பவற்றால் உணர்க.

இவ்வாறு வரும் வண்ணக ஒத்தாழிசையினுள் இருசீர் ஓரடிச் சின்னம் பதினாறும் ஒரு சீர் ஓரடியாய் வருவனவும் உள. அவை.

''உறைபதியி னுடன்அயனை உந்திப்பால் படைத்தோயும்
அறைகடல்சூழ் நிலம்முதலாய் அனைத்துலகும் பரப்போயும்''
-தொல். செய். 146ஆம் சூத்திர உரை மேற்கோள்.

என்னும் வண்ணக ஒத்தாழிசையிலும் மூன்றடித்தாழிசை மூன்றும்.

''வானும்நீ; நிலனும் நீ; மதியும் நீ; விதியும் நீ;
தேனும்நீ; அமிர்தும்நீ; திருவும்நீ; உருவும்நீ;
அன்பும்நீ; அருளும்நீ; ஆதிநீ; அந்தம்நீ;
இன்பம்நீ; துன்பம்நீ; இன்மைநீ; உண்மைநீ.
- தொல். செய். 146 சூத்திரஉரை மேற்கோள்.

என ஒரு சீர்ச் சின்னம் பதினாறுமாக வந்தவாறு காண்க.

''கெடலரு மாமுனிவர்''
-தொல். செய். 146 ஆம் சூத்திர உரைமேற்கோள்.

என்னும் கலியுள் முச்சீர் ஓரடி இடை எண்ணினையும் இரு சீர் ஓரடிச் சிற்றெண்ணினையும் ஒரு சார் ஆசிரியர் இரு சீர்

ஓரடியாகவும் ஒரு சீராகவும் அளபெழாமல் அமைத்தவாறும் காண்க! இவ்வாறு வரும் வண்ணக ஒத்தாழிசையினை ஒரு சார் ஆசிரியர் அம்போதரங்க ஒத்தாழிசை என்று கூறுமாறும் உணர்க!

இனி வண்ணகம் என்பது அராகம் என உரைத்து. அவ்உறுப்புடையன வண்ணக ஒத்தாழிசை எனவும் சொல்வர். வண்ணித்துப் புகழ்தலால் வண்ணகம் ஆயிற்று என்பது உணராதே. அன்றியும், எல்லா ஆசிரியரும் செய்த வழிநூற்குத் தொல்காப்பியம் முதல்நூல் ஆதலின், அவரொடு மாறுகொளக் கூறலாம் அது. ஆதலால் அது தொல்காப்பியர் நோக்கம் அன்று என உணர்க! அதற்கும் செய்யுள் வருமாறு)

திணை - பாடாண். துறை - கடவுள் வணக்கம். பனுவல் வாழ்த்து எனினும் ஆம். அலங்காரம் - வாழ்த்து.

அண்டரண்டம் - தேவருலகம். பகிரண்டம் - பேரண்டம். ஈன்று - படைத்து. பெரும் பாழ் - மூலப்பிரகிருதி; காரணநிலை. ஞாங்கர் - இடம். குளிறுதல் - ஒலித்தல். விரசை - பரமபதத்தி லுள்ள புனிதநதி. அப்புறத்தாய் - அப்பால் உள்ளதாய். அம்தாமம் - பரமபதம். அருணன் - சூரியன். அலகிறந்து ஒன்றியது - அநேகம் ஒன்று கூடினாலும். ஒன்றா - ஒப்பு ஆகாத. இந்திரை - திருமகள்.

பந்தம் - தீப்பந்தம். ஒரு நால்வர் - சங்கர்ஷணன், பிரத்தியும் னன், வாசுதேவன், அநிருத்தன் என்னும் வியூக மூர்த்திகள். நிரைத்துள - வரிசைப்படுத்திய.‘

தீவுஏழு - நாவல், இறலி, கிரவுஞ்சம், குசை, இலவம், தெங்கு, புட்கரம் என்பன. இவற்றுள் புட்கரம் என்பது பாற்கடல். பிறதீவுகள் ஆறும் பாற்கடலைச் சூழ உள்ளன என்பது தீவு இரு மூன்றும் சுலவியபாற்கடல் என்பதால் அறியலாம். சுலவிய - சூழ்ந்த. அரவு - சேடனாகிய படுக்கை. ஒருமுதல் - பரத்துவநிலை,

குரம்பை - உடம்பு. ஆனாது - தவறாமல். அமை பருவம் - நன்மை அருகித் தீமை பெருகுகின்ற காலம். அங்கும் அமைபவன் - அவ்விடத்தே அவதாரம் செய்பவன்.

(தொடரும்)

## இராமானுசர் ஆயிரம்

## நூல் மதிப்பீடு

இராமானுசர் ஆயிரம் முதல் மூன்று பாகங்கள் 25.4.2012 அன்று, ஸ்ரீபெரும்பூதூரிலும், 26.4.2012 அன்று, மேலக்கோட்டை திருநாராயணபுரத்திலும் வெளியீடு செய்யப்பட்டன. சுமார் 1,800 பக்கங்கள் கொண்ட முதல் மூன்று பாகங்களில் இராமானுசரின் வாழ்க்கை வரலாறு, மற்றும் இராமானுசரைப் பற்றிய வரலாற்று நூல்கள், துதி நூல்கள் இடம்பெற்றுள்ளன. ஸ்ரீபாஷ்யக்காரர் அருளிச் செய்த 'வேதாந்தஸாரம்' - எளிய தமிழ் மொழிபெயர்ப்புடன் வெளியிடப்பட்டுள்ளது. ரூ. 800 விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள இந்த மூன்று பாகங்களை ரூ. 500க்கு சலுகை விலையில் 31.5.2012 வரை அளிக்கின்றோம். பிரதிகள் வேண்டுவோர். ரூ. 100 Courier Charges சேர்த்து ரூ. 600ஐ எமது அலுவலகத்திற்கு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். இந்த மூன்று பாகங்களுடன் இணைக்கப்பட்ட கேள்வித்தாளுக்கான விடைகளை அதில் கண்டுள்ளபடி எமது அலுவலகத்திற்கு அனுப்பி ரூ. பத்தாயிரத்தைப் பரிசாகப் பெற்றிடலாம்.

**இராமானுசர் -1000 (முதல் மூன்று பாகங்கள்)**

இராமானுசர்-இந்நிலவுலகில்-120 ஆண்டுகள் வாழ்ந்து மக்களை நல்வழிப்படுத்தி நித்யவிபூதியைச் சென்றடைந்தார். இவர் அவதரித்தது பிங்கள வருஷத்தில் ஆகும். ஆங்கில

ஆண்டு கணக்குப்படி கி.பி. 1017. ஆகவே எதிர் வருகின்ற கி.பி. 2017 ஆம் ஆண்டு அவர் அவதரித்து ஆயிரம் ஆண்டுகள் பூர்த்தி ஆகின்றன. அந்த நிகழ்ச்சியைக் கொண்டாடும் வண்ணம் 'இராமானுசர் ஆயிரம்' என்ற நூல் (9 பாகங்கள்) இரண்டு ஆண்டுகளில் (2012, 2013) வெளிவர உள்ளன.

இராமானுசரின் - வாழ்க்கை - வரலாறு - அவர் அருளிச் செய்த நூல்கள், அவருடைய பெருமைகளை பறைசாற்றும் துதிநூல்கள், இராமானுசருடைய சமுதாயச் சிந்தனைகள், மேலாண்மைக் கொள்கைகள், கோயில் நிர்வாகச் சீர்திருத்தங்கள், அர்ச்சையில் அவருக்கு நடைபெறும் வைபவங்கள் போன்ற பல்வேறு செய்திகளை உள்ளடக்கிய கலைக்களஞ்சியமாக (Encyclopaedia), இந்த நூலின் முதல் மூன்று பாகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அதாவது ஒரு குடைக்கீழ் அனைத்து குறிப்புகளும் இடம் பெற்றுள்ளன.

அடியேன் பல்வேறு தரப்பட்ட மனிதர்களோடு உரையாடும்போதும், பல்வேறு ஊர்களுக்குச் சென்று உரையாற்றிடும் போதும் (குறிப்பாக வடஇந்தியாவில்) இராமானுசரின் வாழ்க்கை வரலாற்றையும் அவர் மேற்கொண்ட சமுதாய பணிகளைப் பற்றியதுமான முழுமையான செய்திகளை அறிந்திராதவர்கள் பலரைச் சந்திக்க நேரிட்டது. மேலும் பல தவறான செய்திகளை அவர்கள் மேடையில் தெரிவிப்பதையும் கண்டேன். இதற்கு அடிப்படைக் காரணம் (பொதுவாக ஸ்ரீவைஷ்ணவர்கள் இடையே காணப்படும்) முறையான பிரச்சாரத்தை மேற்கொள்ளாமையே ஆகும். இராமானுசரைப் பற்றிய பன்முகப்பார்வையை நாம் மேடைப் பேச்சுகளிலோ அல்லது உபந்யாஸங்களிலோ தெரிவிப்பது இல்லை. குருபரம்பரைச் செய்திகளைத் தாண்டி வரலாற்றுத் தொடர்புடைய செய்திகளில் நாம் அத்துணை அக்கறை



காட்டுவது இல்லை. உதாரணத்திற்கு கிருமி கண்டசோழன் யார் என்பதைப் பற்றிய முறையான ஆய்வு முறைகளைப் மேற்கொள்வதும் இல்லை, பேசுவதும் இல்லை. வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் தான் நிகழ்வுகளை ஒருங் கிணைக்க முடியும். அவ்வாறு செய்யாவிடில் அந்த நிகழ்ச் சிகளை மற்றைய சமயத்தினர், கட்டுக் கதைகள் என்று கூறியும் வருகின்றனர். அத்தகையதொரு இழுக்கினை நாம் ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை. இந்த நூலில் இதுபற்றிய விரிவானதொரு கட்டுரை இடம் பெற்றுள்ளது.

இந்த நூலின் முதல் பாகத்தில் இராமானுசருடைய வாழ்க்கை வரலாறு பின்பழகிய பெருமாள் ஜீயர் அருளிச்செய்த 'ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம்', பிள்ளைலோகம் ஜீயர் அருளிச்செய்த 'ராமாநுஜார்ய திவ்யசரிதை', ஐதிஹ்ய நிர்வாஹங்கள் வழி பெறப்படும் வாழ்க்கைக் குறிப்புகள், அவருடைய பரந்து பட்ட தமிழறிவு, அவருடைய திவ்யதேச மங்களாசாஸனங்கள், திருநாராயணபுரத்திற்கு அவர் செல்ல வேண்டியதற்கான காரணங்கள், அவருடைய பரமபத ப்ராப்தி ஆகியவை 500 தலைப்புகளில் இடம்பெற்றுள்ளன.

இராமானுசரைப் பற்றிய வரலாற்று நூல்களும், துதி நூல்களும் ஓர் அளவிற்கே இந்த நூலின் இரண்டாம் பாகத்தில் இடம் பெற்றுள்ளன. மற்றைய வரலாற்று நூல்கள் அடுத்த ஆண்டு வெளிவர உள்ள நான்காம் பாகத்தில் இடம் பெற உள்ளன.

இரண்டாம் பாகத்தில் ஸ்ரீமணவாள மாமுனிகள் அருளிச்செய்த 'யதிராஜ விம்ஶதி', ஸ்ரீநிகமாந்த மகாதேசிகன் அருளிச்செய்த 'யதிராஜ ஸப்ததி', மற்றைய ஆசார்யர்கள் அருளிச்செய்த துதி நூல்கள், 'இராமானுச நூற்றந்தாதி',

‘ஆர்த்திப் பிரபந்தம்’, வடுகநம்பி அருளிச்செய்த ‘யதிராஜ வைபவம்’, அழகிய மணவாள தாஸரின் ‘எதிராசர் அந்தாதி’, வடுகநம்பி அருளிச்செய்த ‘ராமாநுஜ அஷ்டோத்தர சத நாமாவளி’, ‘பிரார்த்தனாபஞ்சகம்’, ‘ஸ்ரீராமாநுஜ சுப்ரபாதம்’, ஆசார்யர்கள் அருளிச் செய்த ‘முக்தக ச்லோகங்கள்’, ‘வார்த்தாமாலை’, எறும்பியப்பா அருளிச் செய்த ‘சரமகுரு நிர்ணயம்’ ‘பிரமேயரத்னம்’ - ‘ஆசார்யஹ்ருதயம்’ - ‘ஸ்ரீவசனபூஷணம்’ - ‘தத்வத்ரயம்’ போன்ற நூல்களில் எடுத்தாளப்பட்டுள்ள எம்பெருமானாரின் வார்த்தைகள், ‘யதிராஜ மங்களம்’ ஆகியவை இடம்பெற்றுள்ளன.

இராமாநுசருடைய வாழ்க்கை வரலாற்றைத் தெரிவிக்கும் தமிழ் நூல்களான வடிவழகிய நம்பிதாஸர் இயற்றிய ‘ஸ்ரீராமானுஜ வைபவம்’, சின்ன அம்மாள் என்கிற வாத்ஸ்ய வரதாசார்யர் இயற்றிய ஸம்ஸ்க்ருத காவியமான ‘ஸ்ரீயதிராஜ விஜயம்’, கருடவாகன பண்டிதர் ஸம்ஸ்கிருதத்தில் அருளிச் செய்த ‘திவ்யஸூரி சரிதத்தின்’ தமிழ்மொழி பெயர்ப்பு, ‘ப்ரபந்நாம்ருதத்தில்’ அமைந்துள்ள ‘இராமாநுசர் வைபவம்’, நாயனாராச்சான் பிள்ளை அருளிச் செய்த ‘சரமோபாய நிர்ணயம்’, கோழியாலம் கோயில் சப்தம் வங்கீபுரத்து ஸ்ரீநிவாஸாசாரியரால் இயற்றப்பட்ட ‘திவ்வியசூரிசரிதம்’ (தமிழ்), நாலூராச்சான் பிள்ளை அருளிச்செய்த ‘சரமோபாய தாத்பர்யம்’, ‘யதீந்த்ர ப்ரவண ப்ரபாவத்தில்’ இராமானுசரைப் பற்றிய குறிப்புகள், திருமழிசை அண்ணா அப்பங்கார் இயற்றிய ‘பழநடைவிளக்கத்தில்’ அமைந்துள்ள எம்பெருமானார் வைபவம், இராமாநுசரை நலிந்த (தீங்கிழைத்த) கிருமி கண்ட சோழன் யார் என்பதை பற்றிய ஆய்வு கட்டுரை, ‘கோயிலொழுகு’, ‘திருமலை ஒழுகு’, திருநாராயணபுரம் ‘நியமனப்படி’ ஆகிய நூல்களிலிருந்து தொகுக்கப்பட்ட



திருக்கோயில் நிர்வாக சீர்திருத்தங்கள், காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணாங்கராச்சாரியர் ஸ்வாமி ‘திருப்பாவை ஒவ்வொரு பாசுரத்திலும் இராமானுசரின் பெருமை பேசப்படுகிறது என்பதை வெளிப்படுத்தும் ‘திருப்பாவை ஜீயர்’ என்ற கட்டுரை ஆகியவை இடம்பெற்றுள்ளன.

மூன்றாம் பாகத்தில் எம்பெருமானார் அருளிச்செய்த ஒன்பது க்ரந்தங்களில் ஒன்றான வேதாந்த ஸாரத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு இடம்பெற்றுள்ளது. ‘சாரீரக மீமாம்ஸா சாத்திரம்’ என்றுகொள்ளப்படும் ப்ரஹ்மஸூத்திரங்கள் 545 திற்கும், ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்த சிறு அளவிலான விளக்கஉரை இதில் இடம்பெற்றுள்ளது. ஸ்ரீபாஷ்யம் மிக விரிவாய் அமையப்பெற்றுள்ளதால் பாமரர்களும் அறிந்து கொள்ளும் வண்ணம் தம்முடைய காரேய் கருணையால் வேதாந்தஸாரத்தை அருளிச்செய்துள்ளார் ஸ்ரீ ராமானுஜர்.

கி.பி. 1941ஆம் ஆண்டு ஸ்ரீவேதாந்த தீபிகை மானேஜிங் எடிட்டர் ஸ்ரீ.உ.வே. அனந்தாசார்யர் என்பவரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட ‘வேதாந்தஸாரம்’ சில திருத்தங்கள் செய்யப்பெற்று தற்போது வெளியிடப் படுகிறது. மற்றைய நூல்களின் தமிழாக்கம் அடுத்த ஆண்டு வெளிவர உள்ளது.

இந்த ஆண்டு வெளிவரும் மூன்று பாகங்கள் சுமார் **1800** பக்கங்கள் கொண்டவை. ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய நூல்களில் காணப்படும் மணிப்ரவாள நடை தவிர்க்க முடியாததொன்றாகும். அந்த மொழிநடையை இன்றையத் தமிழ் நடைக்கு முழுமையாக மாற்ற இயலாது. ஸ்ரீவைஷ்ணவ நூல்களைப் படிக்க விரும்புவோர் ஓரளவிற்கேனும் அதில் பயன்படுத்தப்படும் சொற்களைக் கற்றுக் கொள்ள முயல

வேண்டும். ஒருவருடைய முயற்சியும் ஆசார்யனுடைய அருட்பார்வையும் ஒன்று கூடினால் தான் இத்தகைய நூல்களின் உட்பொருளை அவர் அறிந்து கொள்ள முடியும்.

அந்த முயற்சியின் முதற்படியாக இந்த நூலின் **1800** பக்கங்களில் அமைந்துள்ள மணிப்ரவாளச் சொற்களுக்கு மட்டும் ஓர் 'அரும்பொருள் சொல் அகராதி' உருவாக்கப்பட உள்ளது. பாமரனின் பார்வையில் எந்தெந்தச் சொற்களுக்குப் பொருள் விளங்கவில்லையோ, அவற்றை இந்த நூலைப் படிப்போர் ஒருமாத கால அவகாசத்திற்கு எமது அலுவலகத் திற்கு எழுதி அனுப்பினால் நந்தன வருஷம் ஆனி திருவாதிரை தொடங்கி இந்த மூன்று பாகங்களுக்கான அருஞ்சொற் பொருள் அகராதி விற்பனைக்குக் கிடைக்கும். இந்த அகராதியை அடியேனுடைய எண்ணத்தில் கொண்டுள்ள சொற்களின் அடிப்படையில் தயாரிப்பதைக் காட்டிலும், பாமரன் பார்வையில் காணப்படும் சொற் களுக்குத் தருவதே உரிய பயனைத் தரும்.

**உங்களுடைய ஒத்துழைப்பு இந்த உயரிய பணிக்குத் தேவை. அவ்வாறு செய்திட ஒருசிலரேனும் முன்வர வேண்டும்.**

மேலும் இந்த மூன்று பாகங்களின் அடிப்படையில் பரிசுப் போட்டி ஒன்றும் நடைபெற உள்ளது. இந்த மூன்று பாகங்களிலும் கேள்வித் தாள் ஒன்று இணைக்கப்பட்டுள்ளது. அவற்றுக்கான விடையை 1.7.2012க்குள் எமது அலுவலகத் திற்கு அனுப்பி வைத்திட வேண்டும். அதற்கான முதல் பரிசு ஒன்று **Rs.3000**, இரண்டாம் பரிசு இரண்டு, ஒவ்வொரு வருக்கும் **Rs.2000,** மூன்று மூன்றாம் பரிசுகள் ஒவ்வொரு வருக்கும் **Rs.1000.** மொத்தத்திற்கு **Rs.** 10,000 பரிசுத் தொகையாக வழங்கப்படவுள்ளது.



இந்த மூன்று பாகங்களின் அடிப்படையில் பல்வேறு வயதுவரம்பிற்குட்பட்டவர்கள் இடையே பேச்சுப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் ஆகியனவும் விரைவில் நடைபெற உள்ளன. ஸ்ரீ.ஸ்ரீ.ஸ்ரீ.திரிதண்டி ஸ்ரீமந் நாராயண ராமானுஜ சின்ன ஜீயர் ஸ்வாமியின் ஆசியுடன், **Jeeyar Educational Trust (JET)** ஆதரவில் இந்த பரிசுகள் வழங்கப்பட உள்ளன.

பல ஆண்டுகளாக இராமாநுசரைப் பற்றிய பரந்ததொரு நூல் எழுதி வெளியிட வேண்டும் என்ற அவா அடியேன் உள்ளத்திலே வேரூன்றி இருந்தது. இராமாநுசரின் ஆயிரம் ஆண்டு கொண்டாட்டங்களின் ஒரு பகுதியாக இத்தகையதொரு நூல் வெளிவருவது எம்பெருமானாரின் கடாக்ஷத்தினாலேயாகும்(அருட்பார்வையினாலேயாகும்).அடியேன் இந்த நூலின் தொகுப்பாசிரியரே அன்றி ஆசிரியர் என்ற தகுதிக்கு உரியவன் அல்லன். அடியேன் சிறிய ஞானத்தவன்.

கீர்த்திமூர்த்தி புத்தூர் ஸ்ரீ.உ.வே. கிருஷ்ண ஸ்வாமி அய்யங்கார் பதிப்பித்த பின்பழகிய பெருமாள் ஜீயர் அருளிய 'ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம்' பூர்வாசார்யர்களின் வைபவங்களைத் தொகுத்துக் கூறும் 'ஆசார்ய வைபவ மஞ்ஜரி' கி.பி. **1886**ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்ட பிள்ளைலோகம் ஜீயர் அருளிச் செய்த 'ராமாநுஜார்ய திவ்ய சரிதை' ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ.உ.வே. கண்ணன் ஸ்வாமி பதிப்பித்த 'ஸ்ரீராமானுஜ வைபவம்', வேதாந்த விலாசம் என்னும் ஸ்ரீயதிராஜ விஜய நாடகம், மதுரைப் பேராசிரியர் ஸ்ரீ.உ.வே. அரங்கராஜனின் 'காரேய் கருணை இராமாநுசன்', 'மன்னு புகழ் மணவாள மாமுனிவன்', கீதாசார்யன் ஆசிரியர் முனைவர் ஸ்ரீ.உ.வே. வேங்கடகிருஷ்ணனின் 'வாழ்வும் வாக்கும்':

திருவல்லிக்கேணி தென்னாசார்ய ஸம்ப்ரதாய ஸபையினரால் 1978 ஆண்டு பதிபிக்கப்பட்ட ஸ்ரீராமானுஜ விஜயம், இராமானுசர் வைபவங்களை தொகுத்து வெளியிடப் பட்ட பல்வேறு மலர்கள், ஹரிஸமய திவாகரம் பிரசுரத்தாரால் 1929 ஆம் ஆண்டு சாமி ஐயங்காரால் தமிழில் மொழிபெயர்க் கப்பட்ட கருட வாகன பண்டிதரின் திவ்ய ஸூரி சரிதம், கோழியாலம் கோயில் சப்தம் வங்கீபுரம் ஸ்ரீநிவாஸாசாரியரால் இயற்றப்பட்ட 'திவ்யசூரிசரிதம்' (தமிழ்ப் பாசுரங்கள்), "What was the path trekked by Srimad Ramanuja "in whites" **900** years ago travelling from Srirangam to Mysore state?, - Kari Varadan Kainkarya Sabha (K.V.K.S.) Regd. Trust வெளியீடு, ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ வெளியீடுகளான ''எம் இராமாநுசன் ஒரு மெய்ம்மைப் பெருங்கடல்'', ''கோயிலொழுகு 7 பகுதிகள் 18 பாகங்கள்'', பூர்வாசார்ய ஸ்தோத்ர மாலா நான்கு பாகங்கள், சப்தகிரி மாத இதழில் வெளிவந்த திருமலை ஒழுகு பதிப்பாளர் கோ. பாலசுந்தர நாயகர், ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் மாத இதழின் ஆசிரியர் கீர்த்தி மூர்த்தி புத்தூர் S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார் பதிப்பித்த 'ப்ரபந்நாம்ருதம்' முதல் பாகம் ஸ்ரீராமானுஜ சரித்திரம், ஸ்டார் ஆப் இந்தியா அச்சுக் கூடத்தில் 1891ஆம் ஆண்டு பதிப்பிக்கப்பட்ட திருமழிசை அண்ணா அப்பங்கார் ஸ்வாமியின் 'பழநடைவிளக்கம்', பாஞ்சஜன்யம் மாத இதழ்கள் ஆகியவற்றிலிருந்து பல்வேறு குறிப்புகள் இந்த நூலின் இரண்டு பாகங்களிலும் இடம்பெற்றுள்ளன. மேற்குறிப்பிட்ட நூல்களிலிருந்து மேற்கோள் பகுதிகளாக குறிப்புகள் எடுக்கப்பட்டுள்ளன. அதற்கு அனுமதி தந்த நூலாசிரியர்கள் மற்றும் பதிப்பகத்தினர்க்கு அடியேனுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு 'இராமானுசர் ஆயிரம்' மூன்று பாகங்கள் கொண்ட தொகுப்பு நூல்களை அச்சிடுவதற்கான பெரிய



தொரு தொகையை நிதியுதவியாக அளித்த சேலம் **A.N.S. Jewellers** உரிமையாளர்கள் கைங்கர்ய ஸ்ரீமான்கள். A.S. ராஜேந்திரன், A.S.ஸ்ரீராம் ஆகியோருக்கும், புருஷகாரம் புரிந்த கோமடம் ஸ்ரீ.உ.வே. சடகோபாசார்யர் ஸ்வாமிக்கும் அடியேனுடைய க்ருதஜ்ஞைதயைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

வெளிநாடுவாழ் அன்பர்கள், குறிப்பாக ஸ்ரீ.உ.வே. வீரராகவன் ஸ்வாமியின் (**talk sintamil.com** புகழ்) புருஷகாரத்தால் ஒரு கணிசமான அளவு நிதி உதவி கிடைத்துள்ளது. அவர்களுக்கும் அடியேனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மூன்று பாகங்கள் கொண்ட 'இராமாநுசர் ஆயிரம்' என்ற இந்த நூலுக்கு அணிந்துரை வழங்கிய தில்லை திருச்சித்ரகூடம் ஸ்ரீ.உ.வே. A.V. ரங்காசார்யர் ஸ்வாமி மற்றும் மதுரை பேராசிரியர் ஸ்ரீ.உ.வே. அரங்கராஜன் ஸ்வாமி ஆகியோர் திருவடிகளில் அடியேன் சிரம்தாழ்த்தித் தண்டனிடுகிறேன்.

இந்த நூலின் முதல் பாகத்தில் இராமாநுசரின் வாழ் வையும், பணிகளையும் பல்வேறு தலைப்பிட்டு விவரித் திடும்போது சில நிகழ்ச்சிகள், மீண்டும் மீண்டும் சில தலைப்புகளின் கீழ் விவரிக்கப்பட்டுள்ளன. இதனை 'கூறியதுகூறல்' என்ற குற்றத்தின்பால் வாராது. அதற்கான காரணம் பூர்வாசார்யர்களின் பல்வேறு க்ரந்தங்களிலிருந்து செய்திகள் தொகுக்கப்படும்போது ஒரே நிகழ்ச்சி பல்வேறு மேற்கோள் நூல்களில் இடம்பெறுகின்றன. மேலும் உடையவரின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் திவ்யஸூரி சரிதம், ப்ரபந்நாம்ருதம், பழநடைவிளக்கம் மற்றும் துதி நூல்களில் ஒரே நிகழ்ச்சி பல்வேறு பகுதிகளில் குறிப்

பிடப்படுவதோடு மட்டுமல்லாமல் நிகழ்ச்சிகளை விவரிப்பதில் முரண்பாடுகளும் காணப்படுகின்றன. அவ்வாறு விவரிக்கப்பட்ட நிகழ்வுகள் இராமானுசருடைய பல்வேறு குணநலன்களை விவரிப்பதாக நாம் கொள்ள வேண்டும். இராமானுசரின் குணக்கடலில் திளைப்போருக்கு அமிர்தம் போலே விளங்குவது இந்நிகழ்வுகள். ஆகவே அடியார்கள் இத்தகைய நிகழ்ச்சிகளை மீண்டும் மீண்டும் படிக்க நேரிடும்போது இந்த விண்ணப்பத்தை திருவுள்ளங்களில் கொண்டிடுமாறு ப்ரார்த்தித்துக் கொள்கிறேன்.

ஸ்ரீ.ஸ்ரீ.ஸ்ரீ. திரிதண்டி ஸ்ரீமந் நாராயண ராமானுஜ சின்ன ஜீயர் ஸ்வாமி இராமாநுசரைப் பற்றிய செய்திகளை ஒரு தொகுப்பு நூலாக வெளியிட வேண்டும் என்னும் தம் அவாவை அடியேனிடம் சென்ற சில ஆண்டுகளுக்கு முன்பு வெளிப்படுத்தினார். அதை ஆங்கிலம் மற்றும் பல இந்திய மொழிகளில் மொழிபெயர்த்து பரப்ப வேண்டும் என்ற பேரவாவின் விளைவே 'இராமாநுசர் ஆயிரம்' என்ற இந்நூல். கி.பி. **2017** ஆம் ஆண்டுக்குள் மக்கள் மத்தியிலே பெருமளவில் இராமாநுசருடைய வாழ்க்கை வரலாறு மற்றும் அவர் நடைமுறைப்படுத்திய மேலாண்மைக் கொள்கைகள் அவருடைய சமுதாயத் தொண்டுகள், சமுதாயச் சிந்தனைகள், பரப்பப் பட வேண்டும். என்பதற்காகப் பல்வேறு நடைமுறைத் திட்டங்களை செயல்படுத்தி வருபவர் ஸ்ரீ.ஸ்ரீ.ஸ்ரீ. திரிதண்டி ஸ்ரீமந் நாராயண ராமானுஜ சின்ன ஜீயர் ஸ்வாமி அவர்கள். அந்த ஸ்வாமியினுடைய மங்களாசாஸனம் 'இராமாநுசர் ஆயிரம்' என்ற இந்த நூலுக்கு மகுடம் போல் அமைந்துள்ளது. ஜீயர் ஸ்வாமியின் திருவடிகளில் தண்டனிட்டு அடியேனுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ✱✱✱



# பிள்ளைலோகம் ஜீயர் அருளிச்செய்த "ஸ்ரீவைஷ்ணவஸமயாசார நிஷ்கர்ஷம்" நூல் மதிப்பீடு

**ஸ்ரீ வைஷ்ணவ ஸமயாசார நிஷ்கர்ஷம்- பக்கங்கள் 265 - $A_4$ Size வெளியீடு ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ மற்றும் ஸ்ரீபரவஸ்து டிரஸ்ட். விலை. ரூ.400. கிடைக்குமிடம். ஸ்ரீவைஷ்ணவஸ்ரீ, 214, கிழக்கு உத்தர வீதி, ஸ்ரீரங்கம், திருச்சி-6. Courier Charges. தமிழ் நாட்டிற்குள் ரூ.60.**

ஸ்ரீமணவாளமாமுனிகளின் அஷ்டதிக்கஜங்களில் ஒருவரான பரவஸ்துபட்டர் பிரான்ஜீயரின் திருக்குமாரர் அழகிய மணவாளன் என்றும் அவருடைய பௌத்ரரே வரதாசார்யர் என்றும் அறியப்படுகிறது. வரதாசார்யரே துறவுபூண்டு பிள்ளைலோகம் ஜீயர் என்று அழைக்கப்பெற்றார். பிள்ளைலோகம்ஜீயரின் தனியன்களில் ஒன்று,

ஸ்ரீசட$_2$ாரி கு$_3$ ரோர் தி$_3$வ்ய ஸ்ரீபாத$_3$ாப்$_3$ஜ மது$_4$வ்ரதம் ।
ஸ்ரீமத் யதீந்த்ர ப்ரவணம் ஸ்ரீலோகார்ய முநிம் ப$_4$ஜே ॥

பிள்ளைலோகம்ஜீயரின் ஆசாரியர் ஸ்ரீசடகோபார்யர் என்று தெரிவிக்கிறது. அவர் ஸ்வயமாசார்ய புருஷராகையாலே தந்தையார் திருநாமம் சடகோபார்யர் என்று கொள்ளலாம். எனவே,

பட்டர்பிரான் ஜீயர்
|
அழகிய மணவாளன்
|
சடகோபாசார்யர்
|
வரதாசார்யர் என்ற பிள்ளைலோகம்ஜீயர் என்று திருமுடி அடைவாகும்.

திருக்கடன்மல்லையில் ஸ்தலசயனத்துறைவார் கோயில் கொண்டிருந்த ஆலயம் கடல் கொந்தளிப்பால் சிதைவுற்றிருந்ததைப் பிள்ளைலோகம்ஜீயர் விஜயநகர தேசாதிபதி ஸ்ரீவீர நரஸிம்மராயரின் உதவிகொண்டு புதுப்பித்துத் திருப்பணிகள் செய்தார். சித்திரை மாதத்தில் பூசநக்ஷத்திரத்தில் கொடியேற்று விழாவும் விசாக நக்ஷத்திரத்தில் தீர்த்தவாரி விழாவும் நடத்தினார். அரசனும் ஜீயர் திருவடிகளில் ஆசிரயித்து அவருக்குத் திருக்கோயிலில் முதல் தீர்த்தம், அருளப்பாடு, பரியட்டம், திருமாலை முதலிய வரிசைகளை அவை எப்போதும் நடைபெறும்படி ஆணையிட்டு அதனை எம்பெருமான் முன்னிலையில் செப்புப் பட்டயத்தில் எழுதிக்கொடுத்தான்.

**பிள்ளைலோகம்ஜீயரின் காலம்**

செப்புப்பட்டயம் வெளியிடப்பட்ட காலம் சாலிவாஹன சகாப்தம் 1236 என்று தெலுங்கு லிபியிலுள்ள அப்பட்டயம் கூறுகிறது. இது கி.பி. 1614ஆம் வருடமாகும். அப்பட்டயத்தில் யதீந்த்ரப்ரவணப்ரபாவம் என்று பிள்ளைலோகம் ஜீயர் அடைமொழியுடன் குறிக்கப்பட்டுள்ளார். எனவே கி.பி. 1614க்கு முன்பாகவே அவர் தாமெழுதிய 'யதீந்த்ரப்ரவணப்ரபாவம்' என்ற நூலால் புகழ் பெற்றாராதல் வேண்டும். மணவாள மாமுனிகள் 15ஆம் நூற்றாண்டில் இடைப்பகுதியில் கி.பி. 1443இல் பரமபதம் அடைந்தார். அக்காலத்தில் பட்டர்பிரான் ஜீயர் பிரஸித்தமாய்



விளங்கிய சீடர். அவர் வழியில் மூன்றாம் தலைமுறையில் வந்தவரே பிள்ளைலோகம்ஜீயர். எனவே இவர் காலம் கி.பி. 1550-1650 என்று ஆகிறது.

பிள்ளைலோசம்ஜீயர் வாழ்ந்த காலத்தைப்பற்றிய குறிப்புகள் சிலவற்றை திருவரங்கம்பெரிய கோயில் கல்வெட்டொன்று தெரிவிக்கின்றது. கி.பி. 1614ஆம் ஆண்டு விஜயநகர சிற்றரசனால் கொடுக்கப்பட்ட தாமிரப் பட்டையம் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது. இந்தக் குறிப்பிற்கு கல்வெட்டு எண். ARE 8 of 1938-39 ஸ்ரீரங்கம் கல்வெட்டு எண். 523 இரண்டாம் திருச்சுற்றான ராஜமஹேந்திரன் திருச்சுற்றின் கிழக்கு மற்றும் வடக்குப் பக்கச் சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு வலிமை சேர்க்கிறது. கி.பி. 1612ஆம் ஆண்டு விஜயநகர மன்னனான வேங்கடவன் காலத்தில் இந்தக்கல்வெட்டு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் கல்வெட்டின் வழி கீழ்க்கண்ட செய்திகள் அறியப்படுகின்றன.

''யதீந்த்ரப்ரவணப்ரபாவ பிள்ளைலோகார்ய ஜீயருடைய சிஷ்யரான ராமாநுஜ ஜீயர் என்றழைக்கப்படும் ராமாநுஜதாஸரால் ஸ்ரீபண்டாரத்தில் 120 பொன்கொடுத்து ஏற்படுத்தப்பட்ட முதலீட்டின் வட்டிகொண்டு எம்பெருமானாருடைய திருநக்ஷத்திர உத்ஸவத்தின்போது அக்காரஅடிசில் தளிகை ஸமர்ப்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டமை பற்றிக் குறிப்பிடப்படுகிறது''. மேலும் இந்தக் கல்வெட்டுமூலம் பிள்ளைலோகார்ய ஜீயருடைய பூர்வாச்ரம திருத்தகப்பனார் திருநாமம் திருவேங்கடத்தில் எழுந்தருளியிருந்த பரவஸ்து நயினாராசார்யர் என்றும் அறியப்படுகிறது. இந்த பரவஸ்து நயினாராசார்யருடைய மற்றொரு திருநாமம் சடகோபாசார்யர் என்பதை பிள்ளைலோகார்ய ஜீயருடைய தனியன் மூலம் அறிகிறோம்.

**பிள்ளைலோகம்ஜீயர் இயற்றிய நூல்கள்**

1. ஸ்ரீராமாநுஜார்ய திவ்ய சரிதை
2. யதீந்த்ர ப்ரவண ப்ரபாவம்
3. ஸ்ரீவைஷ்ணவ ஸமயாசார நிஷ்கர்ஷம்
4. இராமானுச நூற்றந்தாதி வ்யாக்யானம்
5. நாலாயிர திவ்யப்பிரபந்தத் தனியன்கள் வ்யாக்யானம்
6. உபதேசரத்தினமாலை வ்யாக்யானம்
7. திருவாய்மொழி நூற்றந்தாதி வ்யாக்யானம்
8. ஆர்த்திப்ரபந்த வ்யாக்யானம்
9. ஸப்தகாதை வ்யாக்யானம்
10. யதிராஜவிம்சதி வ்யாக்யானம்
11. அர்த்தபஞ்சக வ்யாக்யானம்
12. திருமந்த்ரார்த்தவ்யாக்யான அரும்பதம்
13. உபதேசத்திருநாமம்
14. செய்யதாமரைத் தாளிணை வாழித்திருநாம வ்யாக்யானம்
15. ஸ்ரீபராங்குசதிவ்ய சரித்ரம்
16. ஸ்ரீபரகால திவ்ய சரித்ரம்
17. வாக்ய குருபரம்பரை

பிள்ளைலோகம் ஜீயர் தாமியற்றிய நூல்களைத் திருவரங்கத்தில் நம்பெருமாள் திருமுன் கருடமண்டபத்தில் விண்ணப்பித்தார் என்றும் பிள்ளைலோகார்யரின் திருவாராதனப் பெருமாளாகிய அழகிய மணவாளனைத் தம் திருவாராதனப் பெருமாளாகப் பெற்றார் என்றும் பெரியோர் கூறுவர்.

ஸ்ரீவைஷ்ணவஸமயாசாரநிஷ்கர்ஷம் என்ற நூல் கி.பி. 1911ஆம் ஆண்டு காஞ்சீபுரம் ஸ்ரீவைஷ்ணவ க்ரந்த முத்ராபக ஸபையாரால் வெளியிடப்பட்டது. இந்த நூலைப் பரிசோதித்து வெளியிட்டவர்கள் ஸ்ரீமான் புதுப்பேர் இளையவில்லி வித்வான்,



வெங்கடாசார்யர் மற்றும் ஸ்ரீமான் புதுப்பட்டு திருவேங்கடாசார்யர் ஆவர். கி.பி. 1911ஆம் ஆண்டிற்கு பிறகு இந்த நூல் வெளிவரவில்லை. மேலும் க்ரந்தாக்ஷரத்தில் கி.பி. 1911ஆம் பதிப்பிக்கப்பட்ட இந்த நூல் அமைந்துள்ளதால் தற்போதைய சூழ்நிலையில் படித்து அறிந்து கொள்ளக்கூடிய ஞானம் படைத்தோர் ஒருசிலரே விளங்குவதால் அந்த நூல் தமிழ் எழுத்துக்களில் தற்போது பிரசுரிக்கப்படுகிறது. மேலும் 10 அத்யாயங்கள் கொண்ட இந்த நூலிற்கு குறுந்தலைப்புகள் தற்போதைய பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன.

'இலக்கியம் என்பது காலத்தைக் காட்டும் கண்ணாடி' என்றதோர் சமூகஇயல் கோட்பாடு ஒன்று உண்டு. 16 மற்றும் 17ஆம் நூற்றாண்டுகளில் ஸ்ரீவைஷ்ணவ சமுதாயத்தின் நிலைப்பாட்டையும், சமூகத்தில் நிலவியிருந்த குழப்பமான நிலையையும், ஸ்ரீவைஷ்ணவத்தில் பூர்வாசார்யர்களின் கொள்கைகளுக்கு முரண்பட்ட கருத்துக்களை வெளிப்படுத்தி ராமானுஜ ஸித்தாந்தத்தில் பிளவை உண்டாக்கிய நவீனர்களின் வாதங்களுக்கு இந்த நூலில் பிள்ளைலோகம்ஜீயர் தினவடங்க பதில் அளித்திருப்பதையும் நாம் காணலாம்.

ஸ்ரீவைஷ்ணவ ஸமயாசார நிஷ்கர்ஷம் என்ற சொற்றொடரை ஸமய நிஷ்கர்ஷம், ஆசார நிஷ்கர்ஷம் என்றும் பொருள் கொள்ளலாம். ஸமயசார நிஷ்கர்ஷம் என்றும் பொருள் கொள்ளலாம். முதல் அத்தியாயமான பரதத்வநிர்ணயத்தில் 60 தலைப்புகளில் பரதத்வநிர்ணயம் செய்யப் பட்டுள்ளது. இரண்டாம் அத்யாயமான ஸதாசார்யநிர்ணயத்தில் 60 தலைப்புகள் அமைந்துள்ளன. மூன்றாவது அத்யாயமான ஸித்தோபாய ஸமர்த்தனத்தில் 41 தலைப்புகள், நான்காம் அத்யாயமான ஸ்ரீபாஞ்சராத்ர ப்ரமாண வைபவத்தில் 30 தலைப்புகள், ஐந்தாம் அத்யாயமாகிய பகவத் பக்த துர்ஜாத்யபகம ஸமர்த்தனத்தில் 100

தலைப்புகள், ஆறாம் அத்யாயமாகிய ப்ரபந்ந ஸ்ரீவைஷ்ணவத் விஜவர்ணாஶ்ரமாதிதர்மப்ரதிபாதகத்தில் 78 தலைப்புகள், ஏழாம் அத்யாயமாகிய ஸ்ரீவைஷ்ணவயதிக்ருஹஸ் தாத்யந்தோந்யவந்த நாதிஶாஸகத்தில் 125 தலைப்புகள், எட்டாம் அத்யாயமான ப்ரபந்நதிநசர்யாப்ராபோதகத்தில் 87 தலைப்புகள், ஒன்பதாம் அத்யாயமான பகவத் ப்ரஸாத யோக்யா(அ)யோக்யாத் யதிதி நிர்ணாயகத்தில் 27 தலைப்புகள், பத்தாம் அத்யாயமான ஶிஷ்டாசார ப்ராதாந்ய நிரூபகத்தில் 18 தலைப்புகள் அமைந்துள்ளன.

**இனி இந்தப் பத்து அத்யாயங்களில் குறிப்பிடத்தக்க சில தலைப்புகளைக் காண்போம்.**

**முதல் அத்யாயம்:** 1. பகவதோ ஜகத்ரக்ஷணசீலத்வம், 5. புராணங்களில் பலாபலவிசாரம், புராணங்களின் 8. தாமஸாதி விசாரம், 9. வேதங்களில் த்ரைகுண்யவிஷயத்வம், 14. இதிஹாஸ முகேந பகவத்பரத்வ ப்ரதிபாதநம், 22. மோஹஶாஸ்த் ரப்ரவசநப்ரகரணம், 34. தேவதாந்தரங்களின் ஸர்வப்ரகார ஹேயத்வம், 37. தார்க்கிதமதநிரஸநம், 38. ஸாங்க்யயோகி மதநிரஸநம், 43. ஸகுணநிர்குணஶ்ருதிகளின் ஐகார்த்யம், 56. நித்யமுக்தருடைய நிரந்தரகைங்கர்ய போகத்வம், 57. கைவல்யஸ்தாநநிரூபணம், 59. ஷண்மதஸங்க்ரஹோபந்யாஸம்.

**இரண்டாம் அத்யாயம்:** 4. ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு வர்ணாசாரங்களிலும், வைஷ்ணவாசார அவஶ்யகத்வம், 5. ஸ்ரீவைஷ்ண வலக்ஷணம், 6. ஶ்வேதம்ருதூர்த்வபுண்ட்ரத்துக்கு ப்ரமாண ப்ரதர்ஶநம், 17. மணவாளமாமுனிகளுடைய பகவதபிமதஸ தாசார்ய த்வப்ரதர்ஶநம், 19. ஏதத் தர்ஶநத்துக்கு மணவாள மாமுனிகள் செய்த மஹோபகாரங்கள், 20. வரவரமுநி

வைபவாநபிஜ்ஞருடைய அவிவேகித்வம், 21. வரவர முநி ஸம்பந்தமே ஸகலாத்மோஜ்ஜீவநஹேதுவாகை, 25. ஸ்ரீவைஷ்ண வர்களின் அமாநுஷ வைபவத்துக்கு ப்ரமாணப்ர தர்ஶநம், 28. ஜந்மநிரூபணமஹாபாபி களுடைய ஆஸுரபாவம் அறியும்வழி, 34. பொலிகபொலிகவின் பகவத்ராமாநுஜவிஷயத்வ ஸதுபதே ஶம், 39. பொலிகபொலிக, நூற்றந்தாதிகளின் ஐக்யார்த்யம், 44. சரமபர்வமே அருளிச் செயல்களுக்கு உள்ளீடாகை, 45. உடையவருடைய பாஞ்சராத்ரப்ரதிதாசார்யத்வம், 48. இப்படியான ஜகதேகாசார்யத்வம் வரவரமுநிகளுக்கு வந்திருக்கை, 52. ஸ்ரீபாஷ்யப்ரவசநாபாவ நிமித்தம், **60. மணவாளமாமுநிஸம்பந்த ஸம்பந்திகளுக்குள்ள மஹிமை.**

**மூன்றாம் அத்யாயம்:** 1. வரவரமுநிதிருவடிஸம்பந்திகளுக்குள்ள வைபவம், 3. ஸ்ரீபாஷ்யத்தில் ப்ரபத்தியை வெளிப்படுத்தாமைக்கு ஹேது, 9. ப்ரபத்திப்ரபந்நர்களுடைய ஸ்வரூபநிரூபணம், 16. ஸித்தோபாயத்துக்கு ஸ்வீகாரங்கத்வநிரஸநம், 22. பிராட்டியுடைய அநுபாயத்வப்ரதர்ஶநம், 26. ஸ்ரீக்கு உபாயத்வப்ராமகப்ரமா ணங்களுக்கு ஸரஸார்த்தஸமர்த்தநம், 28. பிராட்டியின் பாரதந்த்ர்யத்தாலும் அநுபாயத்வம், 41. தேஶிகர் செய்தருளின பிராட்டி புருஷகாரநிர்வாஹண ப்ரதர்ஶநம்.

**நான்காம் அத்யாயம்:** 1. ஸ்ரீவைஷ்ணவர்கள் அனைவர்க்கும் த்ரவிடவேதாத்யயநாவஶ்யகத்வம், 2. ஶ்ரிய:பதிக்கு த்ரவிடவேதாத்யாபகரிடத்திலுள்ள அதிவ்யாமோஹம், 7. உடையவருடைய த்ரவிடோபநிஷத்ப்ராவண்யநிதர்ஶநம், 10. ஊர்த்வபுண்ட்ரதாரணக்ரமப்ரதர்ஶநம், 16. ப்ராஹ்மணருக்கு பஸ்மருத்ராக்ஷதாரணருத்ரார்ச்சநநிஷேதம், 19. ஸ்ரீபாஞ்சராத்ரத்தின்

வேதாதிக்ய ப்ரதர்ஶநம், 25. ஸ்ரீபாஞ்சராத்ரத்தின் அகதி கதிகத்தாலுள்ள வைபவம், 26. பாண்டவப்ரஶ்நம் பாஞ்ச ராத்ரிகமென்கைக்கு நிதாநம், 30. பாஞ்சராத்ரத்தில் ஸர்வோத் க்ருஷ்டஶிஷ்டஸம்மதியிலுள்ள வைபவம்.

**ஐந்தாம் அத்யாயம்:** 3. வைகாநஸர்க்கும் பஞ்சஸம்காரா வஶ்யகத்வம், 4. தத்வத்ரயஜ்ஞாநவத ஏவ பகவதாராத நயோக்யத்வம், 7. அர்ச்சகஶப்தத்துக்கு யோகரூடித்வம், 9. ஸச்சிஷ்யஸதாசார் யலக்ஷணங்கள், 12. கர்பவைஷ்ணவஸ்ய பஞ்சஸம்ஸ்காரகாலநியம:, 13. ஸர்வர்க்கும் பகவதாராதநத்தில் வர்ணாஶ்ரமாசாராவஶ்யகத்வம், 19. ரஹஸ்யத்ரயஸாரத்தில் பூர்வோத்தரவசநவிரோத ப்ரதர்ஶநம், 20. தேஶிகஸூக்திகளில் ஸ்வ வசந தர்ஶநாசார ப்ரமாணவிரோத நிவேதநம், 25. அபஸூத்ராதிகரணத்தின் வைஷ்ணவவிஷயத்வப்ரதர்ஶநம், 26. சார்வேதவநெறியில் ப்ரவேஶவாக்ய விசாரம், 27. ஸ்ரீவைஷ்ணவ ஜாதிநிரூபணக்ரௌர்யவிநாஶங்கள், 28. ஸ்ரீவைஷ்ணவஸூத்ர பதங்களின் அர்த்த விசாரம், 34. சாத்தின சாத்தாதவர்களுக்குள்ள ஸாமாந்யவிசேஷ தர்மநிர்ணயம், 41. சாத்தின சாத்தாதவர்களின் ஸமதிகம பக்திப்ராவண்யங்களுக்கு விஷயம், 42. சாத்தாதஸ்ரீவைஷ்ணவர்களின் உத்தேஶ்யத் வாநுத்தேஶ்யத்வங்கள், 43. சாத்தாத ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு உத்தேஶ்யநியமப்ரதர்ஶநம், 45. அஹங்காரார்த்தகாமரான சாத்தினசாத்தாதவர்களின் அநாத ரணீயத்வம், 50. ரஹஸ்யத்ர யஸாரத்தில் ஸங்குலவசநநிமித்த நிவேதநம், 51. மஹான்கள் ஜந்மநிரூபணபாபத்தால் மநோவைகல்யம், 54. தேஶிகருடைய வாசாடத்வப்ரகடநம், 57. தர்ஶநத்துக்கு தேஶிகர்செய்தருளின உபக்ருதிவிவரணம், 66. தேஶிகர் செயலால்வந்த குருபரம் பரையின் வைகல்யப்ரதர்ஶநம்,



73. ஆழ்வான்நம்பிள்ளைகள் தனியன்கள் அநுஸந்திக்கைக்கு ஸம்ப்ரதாயம், 75. ரஹஸ்யத்ரயஸாராதிகளின் ப்ரமாணஶிஷ்டஸம்ம தத்வப்ரதர்ஶநம், 76. ப்ரதிவாதி பயங்கர அண்ணருடைய தேஶிகபரித்யாக ப்ரகாரம், 81. வரவரமுநிகளின் உபயவேதாந்த ப்ரவர்த்தகஸம்ப்ரதாயக்ரமம், 83. வரவரமுநிகள் ஸம்ப்ரதாயத்தின் ஔசித்யநிதர்ஶநம், 87. ஸம்ப்ரதாயங்களின் அஸதஸ்யதைக்கு பெரியோர்கள் நொந்தது, ஸத்ஸம்ப்ரதாயப்ரசாரமுள்ள ஸ்தலங் களின் அநுஷ்டாநங்கள், 100. ப்ரதிபாதிதார்த்தக்ரோடீ கரணபூர்வகமாக விவேகநிகமநம்.

**ஆறாம் அத்யாயம்:** 5. ப்ரபந்நஸ்ரீவைஷ்ணவர்களுக்கு பரித்யாஜ்யகந்யாப்ரதர்ஶநம், 8. கந்யாவிக்ரயாதிகளும் காரணாந்தரங்களால் க்ராஹ்யமாகை, 11.மாதுலஸுதாதி பரிணயத்தின் வேதவைதிகஸம்மதத்வம், 15. பரிணயத்தில் ஸப்தபத்யநந்தரம் பர்த்ருகோத்ராந்விதத்வம், 18. அவைஷ்ணவ ஸம்பந்தத்தின் அநர்த்தாவஹத்வம், 21. வைஶ்வதேவத்தில் தேஶிகஸூக்திஸித்த ப்ரகாரபேதாங்கீகாரம், 25. அவைஷ்ணவர் களைக்கொண்டு யஜிக்கும் யஜ்ஞாதிகளின் நிஷ்பலத்வம், 26. பரமைகாந்திகளுக்கு பிஷ்டபஶுக்களாலேயே யஷ்டவ்யதை, 27. பிஷ்டபஶுவில் ஸஹேதுகமான தேஶிகருடைய வ்யவஹாரம், 31. பிஷ்டபஶுவிதாநம் ஶ்ருதிமூலத்வே த்ருஷ்டத்வம், 33. ஹிம்ஸா ததபாவவிதாயகஶாஸ்த்ரத்துக்கு பாதாபரிஹாரம், 36. சாக பஶுயாகாதிகாரிகளின் ஸ்வரூபஸ்வ பாவங்கள், 39. ப்ரபந்நர்க்கு நித்யநைமித்திகாநுஷ்டாநக்ரமம், 42. துர்யாஶ்ரமததிகாரிவிசாரம், 52. ''ஏகதண்டீத்ரிதண்டீ'' ஶப்தங்களுக்கு நியமவிசாரம், 58. மஹான்களுடைய யதிவேஷநிவேதநம், 69. ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸர்வோத்தேஶ்யர் என்கைக்குப் ப்ரமாணப்ரதர்ஶநம், 73.

அவைஷ்ணவயத்யா சாரங்களுக்கு கதிகல்பநம், 74. மாயியதி களுக்கு ஶிகோபவீதத் யாகத்தில் புராவ்ருத்தகதநம், 78. ஶங்கரர்க்குவந்த ஶிகோபவீதத்யாகத்துக்குள்ள கிம்வதந்தி.

**ஏழாம் அத்யாயம்:** 1. ஸ்ரீவைஷ்ணவத்வத்துக்கு ப்ரதாநலக்ஷண நிரூபணம், 8. கேவலவிஶிஷ்ட வேஷநிஷ்டரான வைஷ்ணவ ருடைய ப்ரகாரம், 12. சிதசித்விவேகிகளான ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஸேவ்யாஸேவ்யவிபாகம், 18. பரஸ்பரவந்தநமில்லாத ஶிஷ்யமந்யர்க்கு தேஶிகர்காட்டின பாதித்யம், 19. தேஶிகர் காட்டியருளின ஸ்ரீவைஷ்ணவக்ருஹஸ் தாத்யயோந்யவந்தநாசாரம், 20. தேஶிகர்ஸூக்தியில் யதிகளுடையவும் அநுவர்த்த நஸூசகத்வம், 24. ஸர்வாஶ்ரமஸ்த ஸ்ரீவைஷ்ணவாவைஷ்ண வர்களின் ஸேவ்யத்வா(அ)ஸேவ்யத்வங்கள், 28. வர்ணாஶ்ரமநிரூ பணத்தால் வணங்காத துர்மாநிகளின் நாமாநர்த்தக்யம், 30. ஸ்ரீமதஷ்டாக்ஷரார்த்த நிஷ்டருடைய ஸர்வாதிக்யஸேவ்யத்வங்கள், 42. யதிகளுக்கும் மஹான்களான க்ருஹஸ்தாதிகள் மாந்யராகை, 47.ஸ்ரீவைஷ்ணவத்வ மாத்ரத்தாலேயே யதிகளுக்கு அபிவாத்ய ராகை, 53. யோஜநாந்தரத்தில் ப்ரகரணாநௌசித்யப்ரதர்ஶநம், 57. ஸ்ரீவைஷ்ணவாபரநாம ப்ராஹ்மணஶப்தத்தின் ப்ரதாநாபிதேயம், 60. யதிக்ருஹஸ்த பரஸ்பராநு வ்ருத்தியில் பாஞ்சராத்ரஸம்மதி, 61. யதிகள் க்ருஹஸ்தரை ஸேவித்த அநுஷ்டாநத்துககு நிதர்ஶநம், 63. திருவடிகொண்டது ஸந்யாஸவேஷமென்கிறதுக்கு நிதர்ஶநம், 73. யதிகளுக்குப்பௌராணிகா -நுஷ்டாநப்ராதாந்யநிவேதநம், 77. அர்ச்சையில் உபாதாநஸ்ம்ருதிரூபபகவதபசாரம், 87. பாகவதா பசாரபரரை மோஹிப்பிக்கும்விதம், 88. ஸர்வவர்ணாஶ்ரமத்துக்கும் ஸ்வரூபஜ்ஞாநத்தாலேயே உஜ்ஜீவநத்வம், 89. யதிதர்மஸ முச்சயவசநாபிப்ரேதம், 94. ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு பரஸ்பராபி



வாதநம் ப்ரதாநலக்ஷணமாகை, 98. ஸ்ரீவைஷ்ணவர்க்கு அந்யோந்யாநுவர்த்தநாபாவத்தில் வரும் அநர்த்தபரம்பரை, 113. ப்ரபந்நஸ்ரீவைஷ்ணவர்க்கு பஹுப்ரக்ஷிணநமஸ்காராதி விருத்தம், 114. ப்ரபந்ந ஸ்ரீவைஷ்ணவர்களின் ப்ரணிபதநத்தில் பகவத்ப்ர மோதம், 116. பஹுப்ரணாமாவஶ்யகத்வ ப்ரமநிராகரணம், 121. ப்ரபந்நஸ்ரீவைஷ்ணவர்க்கு உபோஷ்யதிநப்ரதர்ஶநம், 123. பகவத்ராமாநுஜ ஸித்தாந்த நிஷ்டரின் ஸாதாரணசர்யைகள்.

**எட்டாம் அத்யாயம்:** 1. யதிகளுக்கு தரிக்க வேண்டிய காஷாயபாஜநவிசேஷவிசார:, 8. யதிக்கும் ஏகபாத்ரதாப்ர யுக்ததோஷம், 9. யதிகளுக்கும் ஸுவர்ணரஜதபாத்ரங்களின் அபரி ஹார்யதை, 10. ஆஶ்ரமஸ்வீகாரத்திலுள்ள பாத்ரபரிக்ரஹத்துக்கு பரிஹாரம், 14. யதிகளிலும் அர்த்தகாமபரவஶரின் அநாதரணீ யத்வம், 18. யதிவ்யதிரிக்தர்க்கு தேவவிப்ராதிகாரத்தில் பாதித்யம், 24. யதிதர்மஸமு ச்சயத்தில் விதிவசநாபிப்ரேதம், 25. மடாதிபதி களுக்கு ஏகபிக்ஷாவிசாரதந்நிர்ணயங்கள், 36. பகவத் பாகவதப்ர ஸாத வைலக்ஷண்யம், 39. ஸாமாந்யத: யதிக்கு பிக்ஷாநர்ஹ விஷயங்கள்,42. ஸ்வரூபஜ்ஞரான ஸ்ரீவைஷ்ணவயதிகளுடைய சர்யாகுஶலம், 47. ரஜஸ்வலாஸூதிகாவிஶ்வர்த்தைகளின் நியமாசாரங்கள், 49. அநுமரணத்தின் ஸ்வரூபாநு பத்வவிசாரம், 55. ஸ்ரீவைஷ்ணவயதி க்ருஹஸ்தாதிகளுக்கு தர்பபவித்ரங்களின் த்யாயதை, 56. ஏகாதசீஸ்ராத்தத்தின் கர்த்தவ்யகாலநிவேதநம், 58. ஸ்ரீபாஞ்சராத்ரத்தில் நம் ஆசார்யர்களின் ஈடுபாடு, 61. ஸ்ரீக்ருஷ்ணஜயந்திக்கு ஸப்த மிக்ருத்திகாவேதையாமாகில் த்யாஜ்யதை, 65. ஶுபாஶுபங்களில் த்ரவிடோபநிஷத் அத்ய யநக்ரமம், 66. ஆழ்வார்களுக்கு ஸ்ரீஸேநாதிபராலே பகவத் ஸம்பந்தம், 68. உடையவர்க்கு ஸ்ரீதிருக்கச்சிநம்பி திருவடிகளில்

ப்ரதிபத்தி, 69. ஸ்ரீகாஞ்சீபூர்ண யதிவரர்களுடைய அவதார ரஹஸ்யம், 70. ஸ்ரீமடஜித்காஞ்சீபூர்ணர் களுடைய தேவாதி பபதபக்திக்கு நிதாநம், 71. விரக்தரான சாத்தினசாத்தாதவர்கள் ஸ்ரீபாததீர்த்தத்தின் உத்தேஶ்யதை, 75. ப்ரபந்நஸ்ரீவைஷ்ணவர்க்கு பரிஹரணீயப தார்த்தங்கள், 81. அர்த்த பஞ்சங்களிலும் ஸீமாபூமிஜ்ஞாநம், 86. ஸ்ரீவைஷ்ணவனுக்கு பாகஶுத்தி அத்யா வஶ்யகதை, 87. ஸ்வாநுஷ்டாநபூர்வக திருவாராதநக்ரமகதநம்.

**ஒன்பதாம் அத்யாயம்:** 1. மாதுகரயோக்யஸ்தலபஞ்சகாலங்களின் விமர்ஶ:, 4. பகவத்ப்ரஸாதத்தின் ஸர்வபாவநத்வம், 16. வர்ணாஶ்ரமகர்மங்களின் வைஷ்ணவத்வாநுரூபாவஶ்யகத்வம், 26. நிஷ்க்ருஷ்டார்த்தங்களின் ஸர்வாதிஶாயித்வம்.

**பத்தாம் அத்யாயம்:** 1. ஶிஷ்டாசாரத்தின் ப்ராதாந்யத்தில் ப்ரமாணஸம்மதி, 6. பூர்வாசார்யர்களுடைய ஸதாசாரப்ரசாரம், 7. பரம்பராதத்தமான அநுஷ்டாநங்களின் அவஶ்யமநுஷ்டேயத்வம், 9. கர்மஜ்ஞாநநிஷ்டயதிகளின் லக்ஷணவிசார பாரம்யங்கள், 12. யதிஸாமாந்யத்துக்கு அபரக்ரியாபேதவிசாரம், 14. விஶிஷ்ட நிஷ்க்ருஷ்ட பரயதிகளின் பலதாரதம்யம், 17. பகவத்ராமாநுஜ ஸர்வஸம்மதஸர்வோத்தாரகத்வம், 18. யதீந்த்ரப்ரவணரிடத்தில் தேங்கின நிஷ்டா(அ)நுஷ்டாநங்களுக்கு மூலப்ரமாணம்.

தென்னாசார்ய ஸம்ரதாயமே ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயம் என்ற உண்மையை பல ப்ரமாணங்களின் அடிப்படையில் பிள்ளைலோகம்ஜீயர் இந்த நூலில் அறுதியிட்டுள்ளார். இந்த நூலில் காணப்படும் அனைத்து அத்யாயங்கள் மற்றும் குறுந்தலைப்புகள் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தின் ஆணி வேர்களை அறிந்துகொள்ள உதவிடும். ✱✱✱



# சொல்லும் பொருளும்

இதழ் 154இன் தொடர்ச்சி. ஆசிரியர்: மு. அருணாசலம்

## திருவிருத்தம்

ஆழ்வார் நாயன்மாருடைய அருட்பாசுரங்களுள் விருத்த யாப்பில் பாடப்பெற்ற பதிகங்கள் இப்பெயர் பெற்றுள்ளன என்று கருதுதல் இயல்பு. ஏழாம்நூற்றாண்டில் அப்பர் சுவாமிகள், 4ஆம் திருமுறையில் பாடிய இறுதி 34 பதிகங்களும் (80-113, பாடல்கள் 301), ஏழாம் நூற்றாண்டில் நாலாயிர திவ்யப் பிரபந்தம் மூன்றாம் பகுதி இயற்பாவில் ஐந்தாம் பிரபந்தமாயுள்ள நம்மாழ்வார் திருவிருத்தமும் (பாடல்கள் 100) திருவிருத்தமென்றே பெயர் இடப் பட்டுள்ளன. ஆனால் இவை விருத்தங்கள் அல்ல. 11ஆம் நூற் றாண்டில் யாப்பருங்கலம் என்ற இலக்கண நூல், விருத்தம் என்பது, துறையும் தாழிசையும் போல, ஒரு பாவினம் என்று கூறுகிறது; நான்கு பாவகைகளிலும் இது நான்கு வகை விருத்தங்களாகவும் தோன்றுமென்று கூறுகிறது. ஆனால் மேற்கூறிய இரு விருத்தப்பாப் பகுதிகளும் இவ்வகை விருத்தங்களல்ல. இவை கலிப்பாவி னின்றும் தோன்றி எழுத்தெண்ணிப் பாடப் பெறுகின்ற கட்டளைக் கலித்துறைகளாகும். பாடல் நேரசையில் தொடங்கினால் 16 எழுத்தும், நிரையசையில் தொடங்கினால் 16 எழுத்தும் வரிதோறும் உடையவை; வெண்டளை பிழையாதும் இவை வரும். இவ்வியல்பு இவ்விரு திருவிருத்தப் பாக்களுக்கும் பொருந்தியிருக்கிறது. எனவே இவை கட்டளைக் கலித்துறைப்பாக்களே. இவை பாடப்பெற்ற காலத்தில், பாவினங்களின் பெயர்கள் திட்டமாக அமையவில்லை. அக்காரணத்தால் இவை விருத்தம் என்று வழங்கப் பெற்றன போலும்.

கட்டளைக் கலித்துறைப் பாடலில் காப்பியங்கள் செய்யப் பெற்றதில்லை. அபூர்வமாய் சேக்கிழார், அப்பர் சுவாமிகள் ‘ஈன்றாளுமாய் எனக்கெந்தையுமாய்’ என்ற பாடல் பாடியதைச்

சொல்லுமிடத்து, எட்டுப்பாடல்கள் கட்டளைக் கலித்துறையாகவே, 'ஈன்றாளுமாய்' என்ற பாடலின் யாப்பிலேயே, அமைத்திருக்கிறார். வேறு இந்த யாப்பு காப்பியங்களில் வரக் காணப்படவில்லை. பிற்காலத்தில் (17ஆம் நூற்றாண்டு) காஞ்சிப் புராணக்கலித்துறை என்ற ஒரு சிறு புராண நூல் மட்டும் கலித்துறைப் பாவில் பாடப் பெற்றுள்ளது.

நம்மாழ்வார் இறைவன் திருவடிகளை அடைந்து கைங்கர்யங்களைச் செய்ய வேண்டுமென்பதற்காக அடியேன் செய்யும் விண்ணப்பம் என்று 'வ்ருத்த சங்கீர்த்தனம்' பண்ணு வதால் இந்தப் பாடல்கள் வ்ருத்த பாடல்களாயிற்று. திரு என்ற அடைமொழி சேர்ந்து திருவிருத்தமாயிற்று.

**துச்சு, துச்சில்**

துச்சம் என்றால் அற்பம் அல்லது இழிவு என்ற பொருள் பேச்சு வழக்கில் உள்ளது. இலக்கியத்திலும் உள்ளது. இதிலிருந்து வந்தது துச்சு என்ற வடிவம். துச்சு என்றாலும் இழிவான செய்கை என்று பொருள்படும். துச்சான செய்திடினும் பொறுப்பர் அன்றே ஆள் உகப்பார்' என்பது வேணாட்டு அடிகள் பாடிய திருவிசைப்பா.

திருக்குறளில் துச்சில் என்ற சொல் வருகின்றது:

*புக்கில் அமைந்தின்று கொல்லோ, உடம்பினுள்*
*துச்சில் இருந்த உயிர்க்கு. (குறள் - 340)*

துச்சில் என்ற சொல்லுக்கு முதல் முதலாக மணக்குடவர் ஒதுக்குக்குடி என்று உரை எழுதினார். இதையே காளிங்கரும், பரிமேலழகரும், பின் வந்த பரிதியாரும் எடுத்து எழுதியிருக்கி றார்கள். ஆனால் துச்சில் அற்பமான இருக்கை என்று பொருள் கொள்ளலாமோ என்று தோன்றுகிறது. துச்சில் என்பதற்கு, போயிருப்பதற்குரிய இடம் என்று தான் மணக்குடவர் சொல்லு கின்றார். புக்கில் என்பது முத்தி ஸ்தானம் என்பது அவர் விளக்கம்; உயர்வானது இது. மற்றது அற்ப ஸ்தானம்; ஆதலால் துச்சில் என்பது அற்பமான இடம் என்று பொருள் கொள்வது சிறப்பு.

**துருக்கர்**

இச்சொல் தமிழில் இரண்டு வகையாகப் பொருள் ஏற்கிறது.



ஒன்று வடமொழியிலிருந்து துர் - கா; செல்லுதற்கு அரிய இடம் என்பது வடமொழிப் பொருள். உரிச்சொல் நிகண்டு இப்பொரு ளைத் தருகிறது. மலையரண் துருக்கம் எனப்பெயர் பெறுகிறது, அது செல்லுதற்கு அருமையாக இருத்தலினாலே. வட நாட்டிலும் தமிழ் நாட்டிலும் துருக்கம் என்ற பெயருள்ள பல கோட்டைகள் உள்ளன. பிற்காலத்தில் இப்பொருள் இலக்கிய ஆட்சியும் பெற்றிருக்கிறது. கம்பராமாயணத்திலும் கலிங்கத்துப்பரணியிலும் இச்சொல் வருகிறது. இதன் பொருள் துருக்கர் - மலைக்கோட்டையிலிருந்து வருவோர் என்பதாகும்.

துருக்கியிலிருந்து வந்தவர் துருக்கர் எனப்படுவர். இவர்கள் முகம்மதியர்களாய் இருந்தமையால் இச்சொல் இவர்களைக் குறிக்கவே இன்று வழங்குகிறது. துலுக்கர் என்றும் இது மருவி வழங்கும். இது மிகவும் பிற்கால வழக்கு. கம்பராமாயணத்திலும் கலிங்கத்துப்பரணியிலும் இவ்வழக்கை வைத்துப் பொருள் செய்யக் கூடாது. துலுக்கு என்பது வைதிகத்துக்கு மாறானது. திருவீழி மலையிலிருந்த குருக்கள் திருவாரூர் சென்று பூசை செய்தபோது அங்குள்ள மரபு தெரியாமல் தவறாகச் செய்தார்கள் என்றும் அது காரணம் பற்றி அவர்களுக்கு வீழித் துலுக்கு என்ற ஒரு பழிச்சொல் ஏற்பட்டது என்றும் சில பாடல்களால் அறிகிறோம்.

**துரை**

1. இது இன்று நம் அனைவருக்கும் பழக்கமான சொல் ஆங்கிலேயர் இந்தியாவை ஆண்ட காலத்தில் ஐரோப்பியர் அனைவ ரையும் குறிக்க மக்கள் இச்சொல்லை உபயோகித்தார்கள். வெள்ளைத்தோல் முக்கிய காரணம் ஆனால் இச்சொல்லின் இவ்வகை ஆட்சி வெள்ளைக்காரர் இந்தியாவிற்று வந்த பிறகுதான் ஏற்பட்டது என்பது இல்லை. நெடுங்காலத்திற்கு முன்னமேயே, அருணகிரிநாதர் முருகனைத் துரையே என்று அழைக்கின்றார்.

பின்னால் பலரும் இச்சொல்லைத் தலைவன் என்று பொருளில் எடுத்து ஆளத் தலைப்பட்டிருக்கிறார்கள் பாளைப் பட்டுக் காரர்கள் தலைவர்களாய் ஆட்சி புரிந்த காலத்தில், துரை என்பது அவர்களையே குறித்த சொல்லாய் இருந்திருக்கின்றது. வடமொழியில் துரியா என்பது ஒரு தலைவனையோ மந்திரியையோ

குறிப்பிடும் சொல்லாக இருந்திருக்கின்றது; திருமாலுக்கு ஓர் அடைமொழியாகவும் இச்சொல் வடமொழி நூல்களில் சொல்லப்படும். துரியா என்பதில் து என்ற எழுத்து வடமொழியில் த கரவர்க்கம் நான்காம் எழுத்து; துரை என்ற தமிழ்ச்சொல் இதிலிருந்து வந்திருக்கலாம்.

இறைவனுடைய நிலை துரிய நிலை என்று சொல்வது ஒரு மரபு. துரிய நிலையில் உள்ளவன் துரை என்று கருவதும் பொருந்தும். இங்கு து என்பது த கரவர்க்கம் முதல் எழுத்து.

துரைக்குப் பெண்பால் துரைச்சி துரைசானி என்பது பொரும்பாலான வழக்கு. வட மொழியில் ஜாயா என்பது மனைவி என்ற பெயருடைய ஒரு விகுதி. இவ்விகுதி சில தொடர்களோடும் வரும் போது ஜானி என்று மாறும். சீதாஜானி என்றால் சீதையை மனைவியாக உடையவன் என்பது பொருள். இதிலிருந்து இந்த விகுதி துரை என்ற சொல்லோடு சேர்க்கப்பட்டிடருப்பதாகத் தெரிகின்றது. பொருள் தலைகீழாயிருக்கிறது.

எனக்கு நீரொரு துரையலவோ என்பது தில்லைக் கலம்பகம். மீனாட்சியம்மையைக் குமரகுருபரர் துரை மகள் என்று சொல்லிப்பாடுவதும் அறிக.

2. துரை என்ற சொல்லுக்கு வேறொரு பொருளும் உண்டு. துரை என்றால் வேகம் என்பது பொருள். இதைச் சித்தியார் உரையில் சிவஞான சுவாமி எடுத்துக்காட்டுகிறார். ‘துரை மாண்டவா பாடித் தோணோக்கம் ஆடாமோ’ என்ற திருவாசக வரியில், துரை மாண்டவா என்பதன் பொருள் வேகம் அழிந்த தன்மை என்பது. ‘வேகங்கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க’ என்ற திருவாசக வரியும் ஒப்பு நோக்குக. எம்முறு பிறவித் துரை துடைத்து ஆட்கொண்ட தொண்டர்பிரான்’ என்ற சடகோபரந்தாதிப் பாடலும் (47) காண்க.

வடமொழியில் த்வரா-த்வரை என்ற சொல்லுக்கு விரைதல் என்ற பொருளுண்டு, அதிலிருந்தே துரை என்ற சொல் வடிவம் இப்பொருளுடையதாய்ப் பிறந்திருக்கிறது. இதிலிருந்து பிறந்த மற்றொரு வடிவம் துருசு என்பது; துருசு என்பதும் விரைவு என்ற பொருளில் இக்காலச் சாமானிய ஆட்சியில் வழங்குவது.



**துவைத்தல்-தோய்த்தல்**

தமிழிலே இவ்விரண்டும் வெவ்வேறான சொற்கள். பொருளும் வெவ்வேறு. ஆடையைக் கசக்கிச் சுத்தம் செய்வதற்கு உரிய சொல் துவைத்தல் என்பது. தோய்த்தல் என்பது நனைத்தல் என்று மட்டுமே பொருள்படும். தோய்தல் என்றால் தான் ஒன்றிலே மூழ்குதல் படிதல் என்பது பொருளாகும். தோய்த்தல் என்றால் பிற பொருளை நனைத்தல், பாலுக்குப் பிரை ஊற்றுதல் என்ற பொருள்கள் உள்ளன. தெரியாதோர் ஆடை துவைத்தலை ஆடை தோய்த்தல் என்று சொல்லுகிறார்கள். பிராமணர் இவ்வாறு சொல்வது வழக்கம். இது பிழை. இந்தப் பிழைக்கு இடம் கொடுத்து அகராதியிலும் தோய்த்தல் என்றால் ஆடை துவைத்தல் என்று பொருள் சொல்லியிருக்கிறது. இருப்பினும் அது பிழையே.

**தெருவடைச்சான்**

தெரு முழுதும் அடைத்துக் கொண்டு செல்லும் ரதம் போன்ற ஓர் ஊர்தி தஞ்சை ஜில்லாவில் கோயில் பிரம்மோத் சவங்களில் ஐந்தாம் திருநாளன்று இரவு சுவாமியை ஒரு சப்பரத்தில் எழுந்தருளச் செய்து பக்தர்கள் நான்கு வீதிகளிலும் இழுத்து வருவார்கள். இது தேர் போல நான்கு சக்கரத்தில் ஓடும்; முழுமையும் சட்டம் கோத்துச் செய்யப்பட்டிருக்கும், முன்புறம் கோபுரம் போன்ற தோற்றத்தில் வீதி கொண்ட அகலத்திற்கு, அதற்கேற்ற உயரத்தோடு, ஓர் அலங்காரப் படலை அமைக்கப் பெற்றிருக்கும். இது பெரும்பாலும் தென்னங் குருத்தையும் பனங் குருத்தையும் விரித்துப் பின்னப்பட்டிருக்கும். கிராமத்தாருடைய கலைத் திறமை முழுமையும் இதில் காணலாம். இது மிகவும் அகன்று தெரு முழுமையும் அடைத்துக் கொண்டு போவதால் தெருவடைச்சான் என்று சொல்லப் பெறும்.

தெருவடைச்சான் என்பது கிராம மக்கள் அனைவருடைய கைத்திறனும் வெளிப்படுவதற்கான ஒரு வாய்ப்பு. சாதி வேறுபாடின்றி எல்லோரும் இதைச் செய்வதில் பங்கு கெண்டார்கள். பணம் கொடுத்துச் சாமான் வாங்காமல் இயற்கையாகக் கிடைக்கும் பூ இலை தழை ஓலை கொண்டே இவ்வலங்காரம் அமைக்கப் பெற்றது.

**தேவிகள்**

தேவ என்பது வடமொழி; தேவன் ஆண்பால், தேவி பெண்பால்; வானவரைக் குறிக்கும். கோயில் வழிபாடு சம்பந்தமாகப் பேசும்போது, தேவி என்றால், பராசக்தியின் வடிவு (சிவபிரானின் தேவியாதலினாலே); அம்பாள் அம்மன் என்பதும் இதுவே,

தேவி என்பது பிற்காலத்தில் மனைவி என்ற பொருளில் வழங்கப் தலைப்பட்டிருக்கிறது. சிவபிரான் தேவி என்றால் சிபிரான் மனைவி என்பதே பொருள், வைணவ பரம்பரையில் மனைவி என்று சொல்லும் முழக்கமேயில்லை. எங்குச் சொன்னாலும் மிகவும் மரியாதையாகத் தேவிகள் என்ற சொல்லாட்சியையே பார்க்கலாம். குருபரம்பரைப் பிரபாவம், இராமானுசாரிய திவ்ய சரிதை யதீந்திரப் பிரவணப் பிரபாவம் முதலியவற்றில் தேவிகள் என்பது இங்கு பன்மையல்ல, ஒருமையே; ஒருவரையே குறிக்கிறது. இராமானுசர் தேவிகள், கூரத்தாழ்வார் தேவிகள். தோழப்பர் தேவிகள் என்ற ஆட்சிகளைப் பார்க்கலாம். வைணவத்தில் பெண்களிடம் வைத்திருந்த மரியாதையை இது காட்டுகிறது. பெண்களை இந்து சமுதாயம் மிகவும் தாழ்த்தி வந்திருக்கிறது என்று வெள்ளைக்காரர் சொல்லியதையும், எழுதியதையும், அவற்றைக் கண்டு நம்மவர் சொல்லி வருவதையும் கேட்டுக் காது புளித்துப் போனவர்களுக்கு இவ்வைணவ மரபுச் செய்தி மிகுந்த மகிழ்ச்சி அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

**தோசை**

இன்று நாம் நன்கு பழகிவரும் உணவுப் பண்டம். உணவு வகைகள் பலவற்றின் பெயர் தமிழ்ச் சொல்லாயில்லை; தமிழ்ச் சொல்லாயிருப்பவற்றை நாம் அறிவதும் இல்லை. தோசை என்ற சொல்லுக்குச் சிலர் விசித்திரப்பொருள் கூறியிருப்பதையும் கேட்டிருக்கிறோம்.தோ-இருமுறை (வடமொழி); சை-தோசை மாவைக் கல்லில் வார்க்கும் போதும் புரட்டிப் போடும் போதும் ஏற்படுகின்ற ஓசை; ஆகவே இரு சை ஓசை தோசை என்பர். இது எப்படியோ போகட்டும். தோசை ஒரு பழம் தமிழ்ச்சொல் என்று திவாகரர் நமக்குத் தெரிவிக்கிறார். **அப்பவகை**களுள் தோசையும்



ஒன்று என்று அவர் சொல்லுகிறார். (காலம் ஒன்பதாம் நூற்றாண்டு. அவருக்கு முந்தியே இச்சொல் பேச்சிலோ எழுத்திலோ ஆட்சி பெற்றிருக்கிறது என்று அறிய நமக்கு வியப்பு தோசையை வைத்துத்தான் எத்தனைச் சொற்கள் தொடர்பு பெறுகின்றன! தோசைக் கல் தோசை திருப்பி (கருவிகள்); தோசை வார்த்தல், சுடுதல், ஊற்றுதல், குத்துதல் (செயல்கள்); தோசைக்காய் என்ற ஒரு வகை வெள்ளரி இனமும் சென்னை போன்ற இடங்களில் வழங்குவதுண்டு. தோசைக்கு, இருதானிய வகைகளை ஊற வைத்து அரைத்துப் புளிக்க வைத்து இரும்புத் தட்டின் மேல் சூடுவது என்று எந்தப் பாடத்தில் சொல்லியிருக்கிறது?

'முதுகில் தோசை விழும்' என்று அடிப்பதற்கு எச்சரிக்கையாக வழங்கும் வழக்கும் நிலவுகிறது.

இச்சொல் பிற்காலத்தில் இலக்கியத்தில் ஏறியிருக்கிறது. 'பண்டெல்லாம் அப்பம் அவல் எள் அதிரசமும் தோசைகளும் கப்புவதும் போச்சே' என்பது ஒரு பாட்டு (பெருந்தொகை 1639). இது கிருஷ்ண தேவராயர் காலம்.

இக்காலத்தில் தோசை என்ற சொல் அதிகச் சமூக ஆட்சி பெற்றிருக்கிறது. தோசை என்ற பணிகாரம் கோயில் நிவேதனப் பொருளாக ஆகியிருக்கிறது, பிள்ளைலோகம் சீயர் தாம் எழுதிய யதீந்திரப் பிரவணப் பிரபாவத்தில் இதைத் தோசைப் படி என்று குறிப்பிடுகிறார்.

**நம்பி**

ஆடவருட் சிறந்தவனை நம்பி என்றல் இலக்கிய மரபு. புறநானூறு 239ஆம் பாடலில் துறை எழுதியுள்ள குறிப்பில், நம்பி நெடுஞ்செழியன் என்ற சொல்லாட்சியைக் காண்கிறோம். சிலப்பதிகாரத்தில் நம்பியார் என்ற சொல் வருகிறது, காதலஞ் செல்வர் என்று அடியார்க்கு நல்லார் உரை எழுதுகிறார்; மணிமேகலையில் 'நம்பி பிறந்தான் பொலிக' என்று இச்சொல் காணப்படுகிறது. நம்பியாரூர் என்பது சுந்தரர் பெயர்; நம்பியாண்டார் நம்பி திருமுறைகளைத் தொகுத்தவர். 'நம்பியும் என் நாயகனை ஒக்கின்றான்' என்பது கம்பராமாயணத்தில பரதனைக் குறித்துக் குகன் கூறும் சொற்கள். சிந்தாமணியாசிரியர் 'குணமாலை

நலனுண்ட நம்பி' என்பர். நம்பி காளி என்பது ஒரு புலர் பெயர். அகப்பொருள் விளக்கம் செய்த ஆசிரியர் நாற்கவிராச நம்பி எனப்படுகிறார். அடுத்த காலத்தில் வைணவ ஆசாரியார் பலர் நம்பி என்றே சுட்டப் பெறுகின்றனர். திருக்கச்சிநம்பி, பெரியநம்பி, திருமலை நம்பி, திருக்கோட்டியூர் நம்பி, வடுக நம்பி முதலான பெயர்களைக் காண்க. வைகானச நம்பியார் என்று கோயிலொழுகு பட்டாச்சாரியரைக் குறிப்பிடுகிறது.

தலைவனாய்ச் சிறந்து குணங்கால் பூரணன் அன இறைவனும் நம்பி என்று சொல்லப்படுகிறான். திருக்குறுங்குடி அழகிய நம்பி, திருநறையூர் நம்பி என்பன வைணவ ஆட்சிகள். சுந்தரர் இறைவனை நம்பி என்று 79 தடவை விளித்துப் பத்துப் பாடல் கொண்ட ஒருமுழுப் பதிகமே பாடியிருக்கிறார். ''நன்றே நம்பி குடி வாழ்க்கை நமக்கிங்கென்னோ பிழைப்பம்மா?'' என்று பரம்பொருளை வேறு எந்த அடையுமில்லாமல் நம்பி என்றும் மட்டுமே கம்பர் கூறுவர். நம்பி மூத்தபிரான் என்பது பலராமனுக்கு இலக்கியங்களில் வழங்கும் பெயர்.

கேரள நாட்டில் இன்று நம்பியார் என்பது ஒரு சாதிப் பெயராகவும் உள்ளது.

நம்பியொத்த சில சொற்கள் உள்ளன. தம்பி-தன் பின்னவன்; இது நன்குதெரிந்து இன்னும் பேச்சு வழக்கிலுள்ள சொல்; பொதுவாகப் பின்னவன் என்றே பொருளுடையது. உம்பி-உன் பின்னவன்; உம்பியும் நீயும் உறங்கேலோரெம்பாவாய்' என்பது ஆண்டாள் திருப்பாவை. நும்பி என்ற சொல்லாட்சியும் இதுவே. எம்பி- என் பின்னவன்; 'எம்பியை ஈங்குப் பெற்றென்' என்பது சிந்தாமணி. இச்சொல் வடிவங்களோடு ஒத்துக் கருதத் தக்கது நம்பி என்ற சொல். முறையாக இதன் பொருள் நம்பின்னவன் என்று அமைய வேண்டுவது. இது எவ்வாறு நம் முதல்வன் என்றாயிற்று? நம்பன் என்ற சொல் திருமுறைகளில் வருகின்றது. திருவாசகத்திற்கு உரை எழுதிய ஒருவர் பம்பத்தகுந்தவன் என்று பொருள் எழுதினார். இது பிழை. நம்பி தலைவன். நம்பன் என்பது நம்பியே. உயிர்களுக்குத் தலைவனாகிய இறைவனையே குறிக்கின்றது. (தொடரும்)



## வாசகர் கடிதம்

**தாம்பரம். S. அனந்தாசாரி.**

ஸ்ரீமான் பாஞ்சஜன்யம் ஆசிரியர் அவர்களுக்கு எழுதுவது. உபயகுசலம். பாஞ்சஜன்யம், மார்ச்,2012 இதழ் இலக்கியச் சிறப்பிதழாகத் திகழ்கிறது. ஸ்ரீமான் மு. அருணாசல த்தின் ''சொல்லும் பொருளும்'' தலைப்பிட்ட கட்டுரை அருமையாய் இனிக்கின்றது, தக்கணாமூட்டி குறித்த விளக்கம், இப்படியுமா பொருள் செய்வார்கள் என்று வியக்க வைக்கிறது. ஆழ்வாரும், ''அறம் நால்வர்க்கு அன்று உரைத்த ஆலம் அமர் கண்டத்து அரன்'' என்று பாடுகிறார். ஆலம் அமர் - கல்லால மரத்தின் கீழ் அமர்ந்த என்றும், ஆலம் - ஆலகால விஷம் தங்கிவிட்ட, கண்டம் கழுத்தினை உடைய, நீல கண்டன் என்றும் இரு பொருளில் கையாளப்பட்டுள்ளது இனிமை.

தனியன் - பற்றிய குறிப்புகள் அவசியம் தெரிய வேண்டியவையே. நூலோடு சேர்ந்ததல்ல. தனிப்பாடல் என்பதால் தனியன் ஆனது. பழக்கத்தில் நூலே இல்லாத தனிப்பாக்களும் தனியன் என்று வழங்கப்பட்டன. ஆசார்யன் துதிகளும் தனியன்கள் என்று அழைக்கப்பட்டன.

சீத்தலைச் சாத்தனார் - சீழ்த்தலைச் சாத்தனார் ஆகி, கவியில் குற்றங்கண்டவிடத்து, எழுத்தாணியால் தன் தலையில் குத்திக் கொண்டு, சீழ் பிடித்த தலையை உடையவராய் இப்பெயர் பெற்றார் என்றே எழுதி வந்தார்கள். என்னே அறிவுடைமை! கேரளத்தில் இன்றும், செற்றலை என்ற ஓர் ஊர் உண்டு. அதை ஆங்கிலத்தில் Shertaly என்று அழைத்தனர். இந்த செற்றலையை சீத்தலை எனக் கொள்ளவும் குறைவில்லை. இவ்வூரைச் சேர்ந்தவர் சாத்தன் - சாத்தனார் (சாஸ்தா என்கிற தெய்வம்) தமிழ்க் கவிஞர். இளங்கோ அடிகளின் (சேரன் செங்குட்டுவன் என்னும் அரசனின் இளைய சகோதரர்) நண்பர். கண்ணகி காவியத்தை இளங்கோ அடிகள் பாடிவிட,

மறுபாதியை - மணிமேகலையை சீத்தலைச் சாத்தனார் பாடி முடித்தார். இருவரும் சேர நாட்டினர். இது இன்றைய கேரளம். இங்கு உள்ளதே செற்றலை - சீத்தலை எனும் ஊர்.

சென்னையை அடுத்த பூந்தமல்லி என்றொரு பழைய நகரம். இதுவே திருக்கச்சி நம்பிகள் அவதரித்த திருத்தலம். இதை ஆங்கிலேயர் Poonamallee- என்று தன் வழக்கப்படி பெயரிட்டான். சுதந்திரத்திற்கு பிறகு, தமிழ் உணர்வு கொண்டோர் இதை பூவிருந்தவல்லி என்று மாற்றி அழைக்கின்றனர். ஆனாலும் இதன் பண்டைய பெயர் அழகான தமிழில் ''பூந்தண்மல்லி'' என்பது கல்வெட்டுகளில் இருந்து அறியப் பெறுகிறோம்.

மற்றொரு பெயர் மாற்ற நிகழ்ச்சியையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன். திருவல்லிக்கேணியையும் மயிலாப்பூரையும் இணைக்கும் இடத்தில் பக்கிங் ஹாம் கால்வாயின் ஒரு ஓடை குறிக்கிடுகிறது. இதன்மேல் ஒரு சிறிய செங்கல் சுண்ணாம்பு கொண்ட பாலம் அமைத்தார்கள். அதிக அகலம் இல்லாதது. அந்நாட்களில் இதன்மீது சைக்கிள்கள், மாட்டு வண்டிகள், குதிரை வண்டிகள் ஆகியவை கடந்து செல்லும். இதை கட்டியவர் பெயரோ அல்லது அந்நாள் கவர்னரின் பெயரோ தெரியவில்லை. வெள்ளைக்காரர்கள் இந்தப் பாலத்திற்கு Hamilton Bridge என்று பெயர் வைத்தார்கள். நம்மவர்களுக்கு இந்தப் பெயர் நாவில் வரவில்லை. ஆகவே 'அம்பட்டன் வாராவதி' என்றே அழைக்கத் தொடங்கினர். பின்காலங்களில் அந்தப் பாலத்தை கடந்து Tram வண்டிகளும், பேருந்துகளும் செல்லத் தொடங்கின. ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்து 'Barber's Bridge' என்று பெயரிட்டனர். தங்கள் சுயசரிதை ஒரு காலப்பெட்டகம். இந்திராகாந்தியின் Committed Judges முழக்கம்தான் இந்நாட்டின் சாபக்கேடானது. நீதித்துறையிலும் அரசியல் சாயம் பூசக் காரணமாயிற்று. காக்காய் பிடிப்பவர்கள் நீதிபதிகளாய் ஏற்றம் பெற்றனர். அவர்களோ 'விமர்சனத்திற்கு அப்பாற்பட்டவர்கள்' என்ற பாதுகாப்பு வளையத்தில் உலா வருகின்றனர். இயக்குனர் திலகம். திரு. பாலசந்தரின் படங்கள் பற்றிய தங்கள் விரிவுரை உண்மையே. அந்த வகையில் என்னைக் கவர்ந்த படம், 'பேசும் படம்' என்ற பேசாத படமே. மேதைதான் அவர். சந்தேகமே இல்லை. ✱✱✱

இவை எல்லாமே கேட்போருக்கு வியப்பும் அதிர்ச்சியும் உண்டாக்குவன. இவை எல்லாம் கடந்த 40, 50 ஆண்டுகளாக எவ்வித அச்சமுமின்றி அறநிலையத்துறை செய்து வருகிறது. இவ்வரம்பு மீறிய செயல்களை எவ்வாறு இத்துறையினரால் செய்ய முடிகிறது? இவற்றையெல்லாம் ஏன் ஒருவரும் தடுக்க முயலவில்லை என்ற கேள்வியும் எழும். பொதுவாக இத்துறை செய்கின்ற அக்கிரமங்கள் பெரும்பாலும் வெளியே தெரிவதில்லை. இத்துறை ஆண்டுதோறும் வெளியிடும் ஆண்டறிக்கைகள், மான்யக் கோரிக்கை விவரங்கள் எல்லாமே பூச்சு வேலை மிக அதிகமாக செய்யப்பட்ட மோசடி கணக்குகளே. இத்துறை செய்துள்ள, செய்து வரும் இன்னும் பல மோசடிகளைத் தெளிவாகத் தெரிந்து கொள்வோம்.

1. 1954ஆம் வருடம் பிப்ரவரி மாதம் 9ஆம் நாள் ஸ்ரீ சபாநாயகர் கோயில் குறித்து மதராஸ் அரசு தான் வெளியிட்ட அரசு ஆணையை ரத்து செய்வதாக உச்ச நீதிமன்றத்தில் வாக்குறுதி அளித்திருந்தது. வாக்குறுதியை பதிவு செய்து உச்ச நீதிமன்றம் சிதம்பரம் பொது தீக்ஷதர்களுக்கு எதிராக அரசு தொடுத்த மேல் முறையீட்டினை தள்ளுபடி செய்தது. உச்சநீதிமன்றத்தின் இத் தீர்ப்பால், சென்னை உயர் நீதி மன்றம் 1951ஆம் வருடம் ஸ்ரீ சபாநாயகர் கோயில் வழக்கில் கொடுத்த தீர்ப்பு மாற்ற முடியாத இறுதித் தீர்ப்பானது.

2. இவ்வாறே முல்கிபேட்டை கோயில் குறித்த மேல் முறையீடும் உச்ச நீதிமன்ற சிறப்பு பெஞ்சினால் தள்ளுபடி செய்யப்பட்டது.

3. ஷிரூர் மடம் வழக்கை மாத்திரம் மதராஸ் அரசு வாதம் செய்ய முனைந்தது. அதிலும் அரசியல் சாசன விஷயங்களை மாத்திரம் வாதிடப்போவதாக அரசு வழக்கறிஞர் நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இம்முன்று கோயில்களையும் மோசமாக நிர்வாகம் செய்த காரணத்தால்தான் அரசு எடுத்துக்கொள்வதாக ஆணை பிறப்பித்தது என்று உயர்நீதிமன்றத்தில் வாதிட்ட அரசும், அறநிலையத்

துறையும் உச்ச நீதிமன்றத்தில் அக்குற்றச்சாட்டுக்களை முழுமையாகத் தவிர்த்து விட்டன. குற்றச்சாட்டுகள் யாவும் பொய்யானவை என்பது இதனால் தெளிவாயின.

1954 ஆம் வருடம் ஷிரூர் மடம் வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் ஏழு நீதிபதிகள் கொண்ட சிறப்பு பெஞ்ச் அளித்த தீர்ப்பே இன்று உச்ச நீதி மன்றமும், உயர் நீதிமன்றங்களும், மத்திய மாநில அரசுகளும், மத உரிமைகள் குறித்தும், கோயில் நிர்வாகம் குறித்தும் பின்பற்ற வேண்டிய தீர்ப்பாகும்.

**உச்ச நீதி மன்றம் 'ஷிரூர் மடம்' வழக்கில் அளித்த தீர்ப்பின் சாரம்:**

(அ) 1951ஆம் வருட அறநிலையத்துறை சட்டத்தின் பல பிரிவுகளை உயர் நீதி மன்றம் ரத்து செய்திருந்தது. அப்பிரிவுகள் பலவற்றை ரத்து செய்தது சரியே என்று உச்ச நீதிமன்றம் உறுதி செய்தது. சில பிரிவுகள் ரத்து செய்யப்பட வேண்டியன அல்ல என்று உச்ச நீதிமன்றம் தன் தீர்ப்பில் கூறியது.

(ஆ) அரசு, ஒருசமயநிறுவனத்தைச் சட்டம் மூலம் முறைப் படுத்தலாம் ஆனால் அதைத் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியாது. ஒரு மதச்சமூகத்தின் சமயநிலையத்தையோ அல்லது அறக்கட்டளையோ நிர்வாகம் செய்வது அரசியல் சாசன ஷரத்து 26இன் படி அந்த சமயச்சமூகத்தின் அடிப்படை உரிமையாகும். அந்த சமூகத்திடமிருந்து நிர்வாகத்தைக் கைப்பற்றி ஓர் அரசு அதிகாரியிடம் கொடுப்பது அவ்வடிப்படை உரிமைக்கு விரோதமான செயல். இச்செயலை அனுமதிக்க முடியாது. (இஃதே அத்தீர்ப்பின் சாரம்.)

(இ) 1951ஆம் வருட சட்டத்தில், ஓர் இந்து சமய நிறுவனத்திற்குச் செயல் அலுவலரை நியமிக்க மூன்று சட்டப் பிரிவுகள் இருந்தன. இவை மூன்றையும் ரத்து செய்திருந்தது சென்னை உயர் நீதிமன்றம். அவற்றுள் இரண்டை மட்டுமே உச்ச நீதிமன்றம் ரத்து செய்தது.

58 ( 3 )( ஞ ) என்ற பிரிவை அனுமதித்த உச்ச நீதிமன்றம் இப்பிரிவின் மூலம் நியமனம் செய்யப்படும் செயல் அலுவலர் அறங்காவலரின் பணியாளர் என்ற அளவில்தான் செயல்படமுடியும்



என்பதாலும், அந்த நியமனங்கள் குறித்து அறங்காவலருக்கு மேல் முறையீடுகள் செய்ய வாய்ப்புகள் உள்ளன என்பதாலும் இப்பிரிவை ரத்து செய்ய வேண்டியதில்லை எனக் கூறியது. செயல் அலுவலர் நியமனம் குறித்த மற்ற ஒருதலைப்பட்சமான பிரிவுகள் 56 மற்றும் 63 முதல் 69 வரையிலான பிரிவுகள், உச்ச நீதி மன்றத்தால் 'குப்பைக்கூடையில்' தூக்கி எறியப்பட்டன.

## 1959ஆம் வருட இந்துசமய அறநிலையத்துறை மற்றும் அறக்கட்டளைகள் சட்டம் என்னும் பெரும் மோசடியில் சிக்கி இந்துக்களாகிய நாம் சீரழிந்து கொண்டிருக்கிறோம்:

ஷிரூர் மட வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினால் 1951ஆம் வருட அறநிலையத்துறை சட்டத்தின் பல முக்கியப் பிரிவுகள் அடிபட்டு போயின. வேறுவழியின்றி 1954ஆம் வருடம் அன்றைய மதராஸ் அரசு இச்சட்டத்தில் சில திருத்தங்களைக் கொண்டு வந்தது. ஆயினும் இத்திருத்தங்கள் மூலம் சிற்சில ஏமாற்று வேலைகள் செய்தது. இவ்வேமாற்று வேலைகளால் மனநிறைவு அடையாத அரசு 1959ஆம் வருடம் பல பெரும் மோசடிகளைச் செய்து ''மதராஸ் இந்து சமய அறநிலையத்துறை மற்றும் அறக்கட்டளைகள் சட்டம், 1959'' என்ற புதிய சட்டத்தினை இயற்றியது. தொடர்ந்து அந்த சட்டத்தில் பல புதிய மோசடிகளைத் திருத்தங்களாகவும், புதுப் பிரிவுகளாகவும் இன்றளவும் சேர்த்து வருகின்றது.

இந்து சமயக் கோயில்களையும், அறக்கட்டளைகளையும் கைப்பற்றி அதில் செய்து வரும் ஊழல்களையும், செய்யத் தவறிய நிர்வாகக் கடமைகளையும் எவரும் தட்டிக் கேட்க முடியாதபடி தமிழக அரசு 1959ஆம் வருட சட்டத்தில் செய்த மோசடிகளில் முக்கியமான சிலவற்றைப்பற்றி இனிக் காண்போம்.

### மோசடி 1 :

உச்ச நீதி மன்றத்தால் ரத்து செய்யப்பட்ட பிரிவுகளில் முக்கியமானவை செயல் அலுவலரை நியமனம் செய்ய அதிகாரம் அளித்த பிரிவுகளாகும். மிக மோசமான சட்டப் பிரிவு என்று கூறி பிரிவு 56 உயர் நீதி மன்றத்தால் ரத்து செய்யப்பட்டது சரியே என்று

உச்ச நீதி மன்றம் தன் தீர்ப்பில் ஆணித்தரமாக எடுத்துரைத்திருந்தது. அது போன்றே, 63லிருந்து 69வரையிலான 7 சட்டப் பிரிவுகள் ரத்து செய்யப்பட வேண்டியவையே. இவற்றை காப்பாற்ற மதராஸ் அட்வகேட் ஜெனரலும் மறுத்து விட்டார் என்பதை உச்ச நீதி மன்றம் பதிவு செய்தது.

உச்ச நீதி மன்றத்தால் தூக்கி எறியப்பட்ட இப் பிரிவுகள் அரசியல் சட்டம் வழங்கிய அடிப்படை உரிமைகளுக்கு விரோதமானவை. மாநில அரசின் அதிகார வரம்பிற்கு அப்பாற்பட்டவை என்பதை நீதிமன்றம் தெளிவாக எடுத்துரைத்த பின்னும் இந்தப் பிரிவுகளைக் கைவிட மதராஸ் அரசிற்கும் அதன் கையாளாகிய இந்துசமய அறநிலையத்துறைக்கும் மனம் வரவில்லை. ***(இப்பிரிவுகள் இல்லையெனில் அறநிலையத்துறை ஒரு பல்பிடுங்கப்பட்ட 'மோடிமஸ்தான்' பாம்பாகத்தான் இருக்க முடியும்.)***

ரத்து செய்யப்பட்ட 56ஆம் பிரிவு 1954ஆம் வருடம் நீக்கப்பட்டதாக அறிவித்து ஒரு சட்டத் திருத்தம் கொண்டு வந்தது மதராஸ் அரசு. ஒரு குறிப்பிட்ட மதத்திற்கு, அதிலும் பெரும்பான்மை யினராக விளங்கும் மதத்திற்கு, எதிரான மோசடிகள் சென்ற 60 வருடங்களாகத் தழைத்து செழித்து ஆலமரமும் அதன் விழுதுகளாகவும் விளங்கும் ஒரே ஜனநாயக நாடு இந்தியாவாகத்தான் இருக்கக் கூடும்.

**மோசடி 2 :**

1951'ம் வருடம் அரசு ஆணை மூலம் ( முதலில் அறிக்கை- அதாவது notification - பின்பு விசாரணை- அதன் பிறகு கோயிலை எடுத்துக் கொள்வதாக அரசு ஆணை ( G.O) வெளியிடும்) எடுத்துக் கொள்ளும் கோயில்களை ஐந்து வருடங்களே செயல் அலுவலர் நிர்வாகிக்க இயலும் என்ற சட்டப் பிரிவு இருந்தது. இஃது அரசியல் சாசன சட்டத்தோடு ஓரளவு இயைந்த சட்டப் பிரிவாகும். 1959'ம் வருடம் புதிய சட்டம் இயற்றும் போது அதிகபட்சம் ஐந்து வருடம் என்று குறிப்பிடும் சட்டப் பிரிவு நீக்கப்பட்டது.

மற்றைய மோசடிகள் இனிவரும் இதழ்களில் விவரிக்கப்படும். (தொடரும்)